விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 07 புதன்கிழமை (23.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 278

**நாளை முதல் ...**

தமிழகத்தின் பிரபல சோதிடர்

**சிவல்புரி சிங்காரம்**

எழுதும் 12 இராசிகளுக் குமான புரட்டாதி மாதப் பலன்கள்.

## அரசாங்கத்துக்கு எதிரான கூட்டணிக்குள் தமிழ்க் கூட்டமைப்பை இழுக்க முயற்சி!

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து மிகப் பெரியளவில் உருவாக்கத் திட்டமிடப்படும் எதிரணிக் கூட்டமைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் உள்ளடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய எதிரணிக் கூட்டமைப்புப் பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பு நாளை வியாழக்கிழமை வெளியாகும் என சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர முன்னர் அறிவித்திருந்தார்.

ஆனால் எதிர்பார்க்கப்பட்டபடி அன்றைய நாள் அறிவிப்பு வெளியாகாது எனத் தெரிவிக்கப்படுகின்றது. கூட்டமைப்புப் பற்றிய நட வடிக்கைகள் (13 ஆம் பக்கம் பார்க்க)

# பருவமழை தொடங்கப் போகின்றது; மீள்குடியமர்வை துரிதப்படுத்துங்கள்!



## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தல்

(நியூயோர்க்)

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் நிலை குறித்து இப்போது நாம் மிகவும் கவலை அடைந்துள்ளோம். ஏனெனில் செப்ரெம்பர் மாத இறுதியில் அங்கு பருவ மழை தொடங்கப் போகின்றது.

ஏற்கனவே சன நெருக்கடியால் முகாம்களில் பெரும் பிரச்சினை காணப்படுகின்றது. எனவே மீள்குடியர்வை துரிதப்படுத்துங்கள் என இலங்கை அரசை தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்கத் துணை அமைச்சர் றொபேட் ஓ பிளேக் கேட்டுள்ளார். (13 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வருவதற்கான பதிவுகள் ஈரப்பெரியகுளத்துக்கு மாற்றம்

(வவுனியா)

வவுனியா கண்டி வீதியில் ரம்யா ஹவுஸ் இராணுவ சிவில் அலுவலகத்தில் செயற்பட்டு வந்த யாழ்.வருவதற்குப் பாஸ் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் இருந்து சுமார் 7 அல்லது 8 கிலோ மீற்றர் தொலைவில் இந்தப் பாஸ் வழங்கும் அலுவலகம் இயங்கி வருவதனால் பயணிகள் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

நாளொன்றுக்கு 300 அல்லது 500 பிரயாணிகளுக்கான டோக்கன்களே வழங்கப்படுவதனால் அவற்றைப் பெறுவதற்காகப் பயணிகள் இரவிலேயே அந்த அலுவலகத்தின் முன்னால் (13 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத் திட்டம் நவம்பரில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி இடம்பெறும் என்றும் தெரிவித்த அவர், இம்முறை அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்திற்கான நாள்கள் குறைக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்விலும் மீள்குடியேற்றத்திலும் அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும்

### ★ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தல் ★

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விலும் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்திலும் அரசாங்கம் அதிக அக்கறை காட்ட வேண்டியது அவசியம்.

பல வருடங்களாக யுத்தத்தின் பிடியில் சிக்கியிருந்த மக்கள் இன்னும் நலன்புரி முகாம்களில் வாடுவதனை அனுமதிக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் தெரிவித்துள்ளார்.

வீடு வசதிகள் அற்று எங்கு போவது என்று தெரியாத நிலையில் வந்த மக்களே நலன்புரி முகாம்களில் உள்ளனர் என்று ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்த கருத்து வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பானதாகும் என்றும் அவர் கூறினார்.

சபையில் நடைபெற்ற அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி குறைநிரப்புப் (14 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் யாழ்.வருகிறார்

(திருகோணமலை)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு 2010 கல்வி ஆண்டுக்கான இலவசப் பாட நூல்களை வழங்கி வைப்பதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றார் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் தகவல் தருகையில்,

2010 கல்வி (14 ஆம் பக்கம் பார்க்க)

### ★ வல்லிபுர ஆழ்வார் ஆலய ★

## கடல் தீர்த்தத்திற்குச் செல்வதற்கு அனைவருக்கும் அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய கடல் தீர்த்தோற்சவத்திற்கு அனைத்து அடியார்களும் செல்வதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

வல்லிபுர ஆலய கடல் தீர்த்தோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது அடியார்கள் அனைவரும் மதியம் 12 மணி (14 ஆம் பக்கம் பார்க்க)

28-09-2009 விஜயதசமி தினத்தில் B.Sc. in Multimedia Computer Science

கற்கைநெறியில் இணைபவர்களுக்கு

அதிரடி கட்டணச் சலுகை!!!

மேலதிக விபரங்கட்கு NORTH LANKA IIT #113, Laxan Plaza, Navalar Road, Jaffna. 0213214305 0217390110

(C-3360)

# திடீர் மரண விசாரணை அதிகாரி நியமனத்துக்கு நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகள் பதவிகளை நிரப்புவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சையை நடத்துமாறு நீதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்ததற்கமைய 2009 ஒக்டோபர் 2ஆம், 3 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களின் மூலப் பிரதியுடனும் அவற்றின் நிழற்படப் பிரதியுடனும் பெயர் குறிக்கப்படும் திகதிகளில் யாழ்.மாவட்டச் செயலகத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, நிரந்தர வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரது சான்றிதழ், அண்மையில் பெறப்பட்ட இரண்டு நற்சான்றிதழ்கள், மேலதிக தகைமைகளுக்கான சான்றிதழ்கள்; விண்ணப்பதாரர் இளைப்பாறிய உத்தியோகத்தராயின் இளைப்பாறியமைக்கான ஆதார ஆவணம்.

**2009 ஒக்டோபர் 2 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்:**

**சாவகச்சேரி பிரதேச செயலகம்**

சின்னத்தம்பி இளங்கீரன், சசிகலா நாகராஜா, சத்தியவதி காண்டீபராஜ், கணபதிப்பிள்ளை ஜெசீலன், இராசேந்திரம் தவமலர், கேசவலிங்கம் வளர்மதி, சிவசுப்பிரமணியம் ஜெயசங்கர் (கரவெட்டி).

**நல்லூர் பிரதேச செயலகம்**

குமார் கெங்காதரன், பரமநாதன் மோகனராஜ், பாக்கியவதி சிவநேசன், சகுந்தலாஜினி ரவிந்திரராசன், தர்ஷினி சுதாகரன், முத்துக்குமார் உதயசிறி, இராசையா வர்ணகுமார் (பருத்தித்துறை).

**சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்**

இராஜரெட்ணம் சரவணன், தம்பையா இரட்ணசிங்கம், மார்க்கண்டு சதீஸ்கரன், திருநாவுக்கரசு ஞானானந்தன், டேவிற் ஞானப்பிரகாசம் மேரிஜோசப், இராஜரெட்ணம் வசீகரன், பரமேஸ்வரன் பவானி, ஐயன் மார்க்கண்டன், இன்னாசிமுத்து அன்ரன் விமலதாஸ், ஜெயரெட்ணம் நிரேஷா,

கோவிந்தராசா சுரேஸ்குமார், கணபதிப்பிள்ளை பிரபாகரன், தர்மலிங்கம் சிறிகமலநாதன், யூலியா சுகிர்தரெட்ணம் சிறினிவாசன், அன்ரனி ஜெராட் பாலேந்திரன்.

**பருத்தித்துறை பிரதேச செயலகம்**

குகராஜா கலைச்செல்வன், சிவஞானசிங்கம் சுகந்தன், வின்சன் டயான் அன்ரலா, சிவராசா சுரபாஸ்கரன், மோகன் அனுரா, செல்வராசா இரட்ணகுமார், ஜெயரெட்ணம் குணாளசிங்கம், வேலுப்பிள்ளை பாஸ்கரன், சின்னையா மோகனராஜா, சிவராசா சதானந்தன், துரைராஜசிங்கம் கலைச்செல்வி, தர்மலிங்கம் செல்வமதி.

**2009 ஒக்டோபர் 3 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்:**

**சங்கானை பிரதேச செயலகம்**

சிதம்பரம் மோகன், கந்தசாமி நந்தகுமாரன், திருஞானானந்தன் ஜெயரூபன்,

**கோப்பாய் பிரதேச செயலகம்**

பிரியந்தி பூபாலசிங்கம், கெங்காதரம் காண்டீபன், முத்துச்சாமி விக்னேஸ்வரன், சிவலிங்கம் இதயதீபன்,

**வேலணை பிரதேச செயலகம்**

நாகராஜா தியாகராஜா, விசுவலிங்கம் பாலகுமார், ஆறுமுகம் நமசிவாயம் பிறேமகுமார்.

**உடுவில் பிரதேச செயலகம்**

சின்னப்பு செல்லர் நடராஜா, மகேந்திரன் தினேஷ், சோமலிங்கம் பரமநாதன், பரஞ்சோதி சத்தியகாந்.

**யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்**

சுபாஷினி தெய்வேந்திரம், அன்ரன் பிறேம்நாத், கந்தசாமி நவநீதன்.

**தெல்லிப்பழை பிரதேச செயலகம்**

நாகராசா நவரெட்ணராசா, சுப்பர் கதிர்காமலிங்கம், சற்குணம் தீபன், மார்க்கண்டு சதீஸ்கரன், ஞானதேவி சேகரன், விஜயரட்ணம் குறிஞ்சிக்குமரன், அப்பையா மதிபவனி, கந்தசாமி சுதாகரன்.

**கரவெட்டி பிரதேச செயலகம்**

நமசிவாயம் கனகசபை சண்முகராஜா.

**காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை**

பொற்கலை சிவநேசன்.

**ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை**

தனிநாயகம் ஜெனனி. (ச)

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு புதிய இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்துக்கு புதிய இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையிலுள்ள, உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான விசேட செயற்திட்ட அதிகாரியாக பணியாற்றிய நுவரெலியாவைச் சோந்த தங்கவேல் கனக ராஜ் என்பவரே யாழ்.இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு நீண்டகாலமாக இணைப்பாளர் பதவி வெற்றிடமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

## தேசிய கல்வி நிறுவன அதிகாரிகள் யாழ். வருவர்

க.பொ.த உயர்தர கலைத்திட்ட மறுசீரமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கு தேசிய கல்வி நிறுவன அதிகாரிகள் இவ்வாரம் யாழ்ப்பாணத் திற்கு வருகை தரவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் தேசிய கல்வி நிறுவன அதிகாரி க.பொ.த உயர் தர பாட ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவார் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

# சுகாதார தொண்டர்களுக்கு 10 பேருக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையில் கடந்த 14 வருடங்களாக கடமையாற்றிய 10 சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் படவுள்ளது.

யாழ். மாநகர சபையில் 10 சுகாதார தொண்டர்கள் கடந்த 14 வருடங்களாகக் கடமையாற்றி வருகின்ற போதிலும் இது வரை நிரந்தர நியமனம் வழங்கப்படாமை குறித்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று அவரது யாழ். அலுவலகத்தில் சந்தித்து தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இவர்கள் தங்களது நிரந்தர நியமனம் குறித்து முறைப்பாடு செய்தமையைத் தொடர்ந்து அமைச்சர், யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவை அழைத்து மேற்படி சுகாதாரத் தொண்டர்களின் நியமனம் குறித்துக் கலந்துரையாடி னார்.

அத்துடன் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தா மேற்படி 10 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (எ)


# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை யோகேஸ்வரராஜா

**(முன்னாள், தொழில்நுட்பவியலாளர், கல்வி திணைக்களம், யாழ்ப்பாணம், வவுனியா, பிரபல ஆங்கில, சிங்கள ஆசிரியர்)**



வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகேஸ்வரராஜா நேற்று முன்தினம் (21.09.2009) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை முத்துரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் தவமணி தேவியின் அன்பு கணவரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் செந்தூரன் (ஆசிரியர், மன்னார்/ சித்தி விநாயகர் பாடசாலை), இதயராஜா (Graphic designer, உதயன் பணிமனை), இதயகாந்தன் (HNDE, Civil Engineering, 2nd Year) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கதிரவேற்பிள்ளை, நாகேஸ்வரராஜா, காலஞ்சென்ற காங்கேஸ்வரராஜா மற்றும் மங்களேஸ்வரராஜா, வனமலர்தேவி, பொன்மலர் தேவி, தவமலர்தேவி, இராசமலர்தேவி, பூமலர்தேவி ஆகியோரின் அன்பு சகோதரரும் சண்முகராஜா, ராதா, தவராஜா (பிரதேசசபை, நல்லூர்), புஷ்பராசா, லிங்கராசா, தனராசா, தனவதி, இன்பம் ஆகியோரின் மைத்துனரும் சந்திரலாதாவின் அன்புமாமனாரும் யதுநந்தனின் அன்புபேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2009) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மதியம் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல் லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 12, இராமுப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொ.பே.:- 0213216608

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை

(C-3356)


# செயல்நிலை ஆய்வு நிகழ்வுக்கு ஐந்து பாடசாலைகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

செயல் நிலை ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கு யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலிருந்து ஐந்து பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.குகதாஸன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, யாழ். சென். றோக்ஸ் றோ.க.வித்தியாலயம், யாழ்.சென்.ஜோன் பொஸ்கோ, கோப்பாய் நாவலர் வித்தியாலயம், உரும் பிராய் சந்திரோதயவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே தெரிவு செய்யப்பட் டுள்ளன.

மேற்குறித்த பாடசாலைகளின் அதிபர்களும், தலா இரண்டு ஆசிரியர்கள் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்றுவிக்கப்பட வுள்ளனர். (ந)

## தீவகத்தைச் சேர்ந்த 500 பேர் நாளை யாழ். அழைத்துவரப்படுவர்

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து தீவகத்தைச் சேர்ந்த 500 பேர் நாளை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்படுவார்கள் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதற்காக யாழ். மாவட்ட செயலக பிரதித் திட்டப்பணிப்பாளர் எஸ்.சுதர்சன் மற்றும் 3 உத்தியோகத்தர்கள் இன்று வவுனியாவுக்கு புறப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து கடந்த இரு வாரங்களில் தீவகத்தைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ச-5)

# வடமாகாண தமிழ்த்தினப்போட்டி அடுத்தமாதம் யாழ்ப்பாணத்தில்

## வடமாகாண கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு மாகாண தமிழ் மொழித் தினப் போட்டிகள் அடுத்த மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

இது தொடர்பில் வடக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மேலும் தெரிவித்த தாவது,

2009ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண தமிழ் மொழித்தின விழா அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாணக்கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இவ் விழாவில் வவுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்து தலா 200 மாணவர்கள் பங்கு பெற்றுவர்.

இவ் விழா தொடர்பான விபரங்கள் இவ்வார இறுதியில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர் களுக்கும் அறிவிக்கப்படும் என்றார். (ச-5)

## மீள்குடியேற்ற அமைச்சின் குறைநிரப்புப் பிரேரணை நேற்று நிறைவேற்றம்

மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சினால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட 35 கோடி ரூபாயிற்கான குறை நிரப்புப் பிரேரணை ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணையை மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த சேவைகள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் முன்வைத்தார். அடுத்த வருட வரவு செலவுத்திட்டத்தின் போது சமர்பிக்க வேண்டிய விபரங்கள் குறித்துதற்போது ஆராய்ந்து வருவதாகப் பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய இதன்போது தெரிவித்துள்ளார்.


## வீடு விற்பனைக்கு

கொத்தன் கலட்டி வல்வெட்டி, வல்வெட்டித்துறையில் உள்ள 5 பரப்புக் காணியுடன் பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:
க.யோகேஸ்வரன்
T.P.:0774042154

(C-3357)


## பொலிஸ் சேவையில் இளைஞர்களை இணைத்தல்

# யாழ் பொலிஸ் நிலையத்தில் மட்டும் 500 விண்ணப்பங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இளைஞர்களை பொலிஸ் சேவை யில் இண்ணக்கும் திட்டத்தில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் மட்டுமிருந்து 500 விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி லெவன்ஹம தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்ததாவது,

யாழ்ப்பாண இளைஞர்களை பொலிஸ் சேவையில் இணைக்கும் திட்டத்தில் யாழ். மா வட்டத்திலிருந்து 500 பேர் தெரிவாகவுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தினால் நேற்று வரை 500 விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

எனினும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும் நேர்முகப் பரீட்சையில் நேரடியாகத் தோற்ற முடி யும் என்றார். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## மகிழ்ச்சிக்கு வழி

இந்த உலகில் நாம் மட்டும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது சாத்தியமில்லாத விடயம். அக்கம்பக்கத்தில் இருக்கும் மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருந்தால் தான் நாமும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

புற உலகில் நமது வாழ்க்கை பிறரைச் சார்ந்திருப்பது போலவே, அக வாழ்விலும் நமது வாழ்க்கை பிறரைச் சார்ந்தே இருக்கிறது. இதைப் புரிந்து கொள்ள உதவுவது தான் இந்தக் கதை.

முன்னொரு காலத்தில் ராஜ்ய வர்த்தனன் என்ற அரசர் இருந்தார். அவர் ஏழாயிரம் ஆண்டுகள் தன்னுடைய நாட்டை மிகச் சிறப்பாக ஆட்சி செய்து வந்தார்.

ஏழாயிரம் ஆண்டுகள் எப்படி ஒருவர் உயிருடன் இருக்க முடியும் என்ற சந்தேகம் உங்களுக்குத் தோன்றலாம் இது புராணக்கதை என்பதால் இதிலுள்ள கருத்தைத்தான் நாம் முக்கிய மிகவும் சாரமாகவும் கொள்ள வேண்டும்.

அரசாட்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றதால் மக்களுக்கு அரசன் மீது மிகுந்த மரியாதை இருந்தது.

ஒருநாள், ராணி அரசனுக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அரசியின் கண் கலங்கியது. இதைப்பார்த்த அரசர், அரசியிடம் அவள் கலங்குவதற்குரிய காரணத்தை விசாரித்தார்.

"உங்கள் தலையில் ஒரு முடி நரைத்திருக்கிறது! அப்படியென்றால் உங்களுக்கு வயதாகி விட்டது என்று தானே அர்த்தம். நான் கண் கலங்க அதுவே காரணம்" என்று அரசி வருத்தத்துடன் கூறினாள்.

"இதற்குப் போய் யாராவது கலங்குவார்களா? இது காலன் எனக்கு விதித்திருக்கும் எச்சரிக்கை! எனவே நான் உடனே காட்டிற்குச் சென்று எஞ்சியுள்ள காலத்தை தவத்தில் கழிக்க வேண்டும்" என்றார் அரசர். "அப்படியானால் நானும் உங்களுடன் வருவேன்" என்றாள் அரசி.

அரசனும் அரசியும் காட்டுக்குப் போய் விட்டால்... அரசாங்கம் என்னாவது?

பொதுமக்கள் பார்த்தார்கள். அவர்கள் அரசனிடம் சென்று, "நீங்கள் இருவருமே காட்டுக்குப் போக வேண்டாம். கொஞ்சம் பொறுங்கள். நாங்கள் சிறிது காலம் கழித்து உங்களிடம் வந்து மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று கூறுகிறோம்" என்று சொல்லிவிட்டு, வெகு தொலைவில் இருந்த சூரியனின் ஆலயத்திற்குச் சென்று தவம் செய்ய ஆரம்பித்தார்கள்.

மூன்று மாதம் கழிந்தது. சூரிய பகவான் அவர்களுக்குக் காட்சியளித்து, "உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

"எங்கள் அரசர் இன்னும் 10 ஆயிரம் ஆண்டுகள் எந்த நோய் நொடியும் இல்லாமல் இளமையோடிருந்து எங்கள் நாட்டை நன்றாக ஆட்சி செய்ய வேண்டும்" என்று வரம் கேட்க ஆரம்பித்தார்கள்.

சூரிய பகவானும் அவர்கள் விரும்பியபடியே வரம் கொடுத்து மறைந்தார்.

அரசனுக்கு இந்த விடயம் தெரிய வந்தது. அவர் சந்தோஷப்படுவதற்குப் பதிலாக வருத்தப்பட்டார். இதைக் கண்ட அரசி "இந்தச் செய்தியினால் மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக வருத்தப்படுகிறீர்களே, ஏன்?" என்று வினவினாள்.

"இந்த வரத்தினால் நான் எப்படி சந்தோஷப்பட முடியும்? நான் பத்தாயிரம் வருடங்கள் உயிரோடு இருக்கலாம். ஆனால் நீயும், இந்த வரத்தைப் பெற்றுத் தந்த நம்முடைய நாட்டு மக்களும் உயிரோடு இருக்க மாட்டீர்களே! என்னுடைய ராணியாகிய நீயும், என் அன்பிற்குரிய இந்த ஜனங்களும் இல்லாமல் நான் மட்டும் எப்படி பத்தாயிரம் ஆண்டுகள் சந்தோஷமாக இருக்க முடியும்?" என்றார் அரசர்.

பின்பு அரசனும் அரசியும் அதே சூரிய பகவானின் ஆலயத்திற்குச் சென்று தவம் புரிந்தார்கள். சூரிய பகவான் அவர்களின் தவத்திற்கு மகிழ்ந்து அவர்களுக்குத் தரிசனம் தந்தார்.

அப்போது அரசனும், அரசியும் நாட்டில் இப்போதிருக்கும் எல்லோருமே பத்தாயிரம் ஆண்டுகள் சீரும் சிறப்புமாக மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்" என்ற வரத்தை சூரிய பகவானிடம் வேண்டிப் பெற்றார்கள்.

இந்தக் கதை மார்க்கண்டேய புராணத்தில் மார்க்கண்டேயர் சொல்வதாக அமைந்துள்ளது.

நம்முடைய மகிழ்ச்சியில் மற்றவர்களின் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது ; மற்றவர்களின் மகிழ்ச்சியில் நம்முடைய மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. இதைத்தான் இந்தக் கதை நமக்கு உணர்த்துகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 21 மீனவர்களும் உடனடியாக விடுதலை

## தொழில் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்படுவர் என கடற்தொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார். இருவேறு சந்தர்ப்பங்களில் 21 மீனவர்கள் தலைமன்னார் கடற் பிரதேசத்திற்குள் ஊடுருவ முயன்ற போது இலங்கைக் கடற்படையினரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர்.

மீனவர்களை விடுவிக்குமாறு எத்தனையோ முறை இந்தியா கோரிக்கை விடுத்திருந்தது. எனவே இலங்கை, இந்தியா இடையிலான நெருங்கிய உறவு நிமித்தம் அவர்களை உடனடியாக விடுவிக்கவுள்ளோம் என ஏசியன் ட்ரிபியூன் செய்தி தாபனத்திடம் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதில் கடற்படையினரின் அத்துமீறல் எதுவும் இல்லையெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் எமது கடற்பகுதிக்குள் ஊடுருவியதாலேயே கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்கவிடம் கடந்த வாரம் ஏசியன் ட்ரிபியூன் இதுகுறித்துக் கேட்ட போது,

நான் சொல்ல விரும்புவது இதைத்தான் அதாவது எமது மீனவர்கள் இந்தியக் கடற் பிரதேசத்திற்குள் நுழையும் போது இந்தியக் கடற்படையினர் அவர்களை கைது செய்கின்றனர்.

இந்திய மீனவர்கள் எமது கடற்பகுதிக்குள் நுழையும் போது எமது கடற்படையினரும் அதையே செய்கின்றனர் என்று தெரிவித்திருந்தார்.

அதேவேளை மீனவர்களும் அகதி முகாம்களில் இருந்து மீள் குடியேறச் செல்பவர்களும் அங்குள்ள பத்திரிகைகளுக்கு வேறு விதமான தகவல்களைத் தருகின்றனர்.

அங்குள்ள மீனவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 39 காங்கிரஸ் உறுப்பினர்களும், தி.மு.க.வினரும் அடுத்த வாரம் கைது செய்யப்பட்ட மீனவர்கள் குறித்தும் முகாம்களில் உள்ள இடம்பெயர் மக்கள் குறித்தும் புதுடில்லி சென்ற பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து வலியுறுத்த இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# இலங்கைக்கு தமிழக அமைச்சர்கள் குழுவை அனுப்ப நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

பிரதமர் மன்மோகன் சிங்கை திமுக - காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களும் எம்.பிக்களும் சந்தித்து இலங்கைக்குத் தமிழக எம்பிக்கள் குழு ஒன்றை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

உட்துறை அமைச்சர் ப. சிதம்பரம், ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதி மாறன், கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி,கே. வாசன் மற்றும் டி.ஆர்.பாலு உள்ளிட்ட திமுக எம்பிக்களும், காங்கிரஸ் எம்பிக்களும் விடுதலைச் சிறுத்தை கட்சி எம்பியான திருமாவளவனும் சந்தித்தனர்.

அப்போது தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவும் உடனிருந்தார். இலங்கையில் முகாம்களில் உள்ள தமிழர்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் உடனடியாக குடியமர்த்த அந்நாட்டு அரசை வலியுறுத்த வேண்டும்.

இலங்கைக்குத் தமிழக எம்பிக்கள் குழுவை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை அவர்கள் பிரதமரிடம் முன்வைத்தனர்.

கோரிக்கையை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதியளித்ததாக எம்பிக்கள் பின்னர் தெரிவித்தனர். (ஓ-6)

# வாசிப்பினை மேம்படுத்தும் விழிப்புணர்வை ஊக்குவித்தல்

தேசிய வாசிப்பு மாத காலத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் வாசிப்பினை ஊக்குவிக்கும் வகையிலான பிரச்சார விழிப்புணர்வை மேம்படுத்தி கொள்ளுமாறு யாழ். மாநகர சபையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

உள்ளூராட்சி மாகாண அமைச்சினால் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளதால் ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் 6 பேருக்கு குறையாத வாசிப்பு அமுலாக்கல் குழு ஒன்றினை உருவாக்கியும் வாசிப்பு, கதை, கட்டுரை, ஓவியப்போட்டி, பட்டிமன்றம், விவாத அரங்கு போன்றவற்றை நடத்தவும், வாசிப்பு தொடர்பான துண்டுப் பிரசுரங்கள், பதாதைகள், சுவரொட்டி என்பவற்றை பொது அமைப்புக்கள் உதவியுடன் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இப்போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான பரிசில் வழங்கல் வைபவத்தினை அந்தந்த பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களினாலேயே முன்னெடுக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்துள்ளனர். (ஓ-30)

# இராசி பலன்

*23.09.2009*
*(புரட்டாதி 7 புதன்கிழமை)*
*பஞ்சமி முன்னிரவு 9.36 மணிவரை*
*விசாகம் பிற்பகல் 3.57 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*
*சித்தாமிர்தம்*

| | |
|---|---|
| மேடம் | வீண் பகை, காரிய தாமதம், போசன நன்மை, மரியாதைக் குறைவு. |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர நன்மை, தொழில் விருத்தி, பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | உற்சாகமான நிலை, செய்தொழில் விருத்தி, சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும். |
| கடகம் | சகோதரர் உதவி, அமைதிக்குறைவு, காரியதாமதம், தனவிரயம். |
| சிங்கம் | தொழில் நன்மை, புதிய விடயம், அதிக பிரயாசை, உறவினர் சந்திப்பு. |
| கன்னி | வாக்குமேன்மை, பிரயாணநன்மை, உறவினர் உதவி, சிந்தனை மிகுதி. |
| துலாம் | விவாதம், எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம், போசன சுகக்குறைவு. |
| விருச்சிகம் | தெய்வசிந்தை, ஜனவசியம், உறவினர் வருகை, முயற்சி கைகூடும். |
| தனுசு | காரிய இடையூறு, நிலை மாற்றம், சுபசெலவு, போசன சுகக்குறைவு. |
| மகரம் | எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், தனவருவாய், கலந்துரையாடல். |
| கும்பம் | நோய் குணமடைதல், அதிக பிரயாசை, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை. |
| மீனம் | கட்டுப்பாடு, திடீர் பயணம், எதிர்பாராத செலவு, புதிய முயற்சி. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 45 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 40 |
| தக்காளி | 60 | 80 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 35 |
| கோவா | 100 | 120 | 130 |
| கரட் | 80 | 90 | 80 |
| பூசணி | 30 | 40 | 25 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 50 | 50 |
| பாகற்காய் | 60 | 70 | 55 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 35 | 45 | 60 |
| பயிற்றங்காய் | 60 | 60 | 35 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 30 | 90 | 40 |
| முருங்கைக்காய் | 70 | 80 | 75 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 240 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 40 |

## தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் யாழ்.மாவட்ட வீர,வீராங்கனைகள் பங்கேற்பு

(வட்டுக்கோட்டை)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் தடகள வீர, வீராங்கனைகள் நேற்றுமுன்தினம் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக ஏ-9 பாதை ஊடாக கொழும்பு பயணமாகியுள்ளனர்.

இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்காக 230 மாணவர்கள் சென்றுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் கலந்துகொள்வதற்காக சென்றுள்ள மாணவர்கள் தற்பொழுது சீதுவ சமூக சேவை நிலைய பயிற்சி மையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான அனைத்து வசதிகளையும், சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணிப்பின் பேரில் தோழர் கண்ணன் உடனுக்குடன் சிறப்பாக வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

27 ஆம் திகதிவரை தேசிய மட்டப்போட்டிகள் 23ஆம் திகதிமுதல் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

யாழ்.வீர,வீராங்கனைகள் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு வசதியாக சுகததாச விளையாட்டரங்கிற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டு போட்டிகளில் கலந்துகொள்வதற்கான வசதிகளும் தோழர் கண்ணனால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட வீராங்கனைகளை யாழ். மாவட்டத்தில் இருந்து கொழும்புக்கு வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா அழைத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-27)

## நிதி ஒதுக்கப்பட்டும் மின் இணைப்பு வேலைகள் இடம்பெறாததால் மக்கள் கவலை

(காரைநகர்)

காரைநகர் கொட்டப்புலம் கிராமத்தில் மின் விநியோகத்திற்கென கடந்த வருடம் ஏழு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்ட போதும் இதுவரை மின்சாரம் வழங்கப்படாதுள்ளதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காரைநகர் பிரதேசத்தில் தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கமநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் -2007 ஆம் ஆண்டின் திட்டத்தினூடாக மூன்று பிரதேசங்களிற்கு (சடையாளி வீதி, தீர்த்தக்கரைவீதி, கொட்டப்புலம் வீதி) மின் இணைப்பு வழங்குவதற்காக கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டிருந் தது.

இதில் கொட்டப்புலம் வீதி தவிர்ந்த மற்றைய இருவீதி மின்இணைப்பு வேலைகளும் நிறைவு பெற்றுள்ளபோதும் கொட்டப்புலம் கிராம வீதியில் மட்டும் மின் இணைப்பு வேலை எதுவுமே நடைபெறவில்லையென சம்பந்தப்பட்ட பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கிராம மின் விநியோகத்திற்கு நிதி ஒதுக்கீடு யாழ்.மின்சாரசபை அலுவலகத்திற்கு கிடைத்ததையறிந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்இணைப்புப் பெறுவதற்கேற்ற வீடுகளை அமைத்த போதும் கடந்த ஒரு வருட காலமாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதுள்ளது.

இந்நிலைமை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் பிரஸ்தாபித்திருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர்.(ஓ-246)

## அரச அதிபர் கிண்ண பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் நடத்தும் அரச அதிபர் கிண்ணத்திற்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ம. வித்தியானந்தநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், திருமதி பரமேஸ்வரி கணேஷ் ஆகியோர் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் (நிதி) சு. சண்முகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-7)

## துரையப்பா விளையாட்டரங்கில் ஜிம்னாஸ்ரிக் கூடம் புனரமைக்க நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம செயற்திட்டத்தின் கிழ் துரையப்பா விளையாட்டரங்கின் ஜிம்னாஸ்ரிக் கூடத்தை புனரமைக்க 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.




இத்திட்டத்தின் மூலம் தேசிய மட்டம் மற்றும் வீர, வீராங்கனைகளை சர்வதேச போட்டிகளிலும் பங்கு பற்றுவதற் கான பயிற்சிகள் வழங்குவதற்கும் கொழும் பில் இருந்து நவீன உபகரணங்கள் கொண்டு வருவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற் கான வேலைத் திட்டங்கள் மிக விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-7)

## நவராத்திரி விழா கலை அளிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜதிலயா நுண்கலை பயிலகத்தின் நவராத்திரி விழாக்கலை அளிக்கை நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 36 பண்டாரக்குளம், நல்லூர் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள நுண்கலை பயிலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் ஓவியக் கண்காட்சியைப் பார்வையிடுதல், புஸ்பாஞ்சலி ,கவுத்துவம் ,கீர்த்தனை, தில்லானா ஆகிய நடன அளிக்கைகள் மற் றும் நகைச் சுவை நாடகம் , பிரதம விருந்தினருக்கு நினைவுச் சின்னம் வழங்கல் ஆகி யன இடம் பெறவுள்ளன. (ஓ-4)

## தொழில்துறைத் திணைக்களத்தின் பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ராப்-பீ நெக்டெப் நிதி அனுசரணையுடன் தொழில்த் துறைத் திணைக்களத்தால் மருதங்கேனி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மணற்காட்டுப் பிரதேசத்தில் 30 பயனாளிகளுக்கான பற்றிக் பிறிண்டிங் தொழில் பயிற்சி நெறி இன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாக தொழில் துறைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகர் பி.ராகவன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## நவாலி வழுக்கையாறு அணைக்கட்டின் கரைப்பகுதிகள் மழையினால் சேதம்

(யாழ்ப்பாணம்)



நவாலி வழுக்கையாறு பல இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. புரைமைப்பின் போது ஆற்றின் கரைப்பகுதிகளில் பாரிய மண் அணைக் கட்டுக்கள் அமைக்கப் பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அவ்வாறு அமைக்கப்பட்டு பாதையாக பாவிக்கப்படுகின்ற அணைக்கட்டின் கரைப்பகுதிகள் தற்போது பெய்து வருகின்ற மழை காரணமாக பல்வேறு இடங்களில் சேதமடைத்து காணப்டுகின்றன.

சில வாரங்களுக்கு முன்னர் பெய்த மழையினால் சேதமடைந்து காணப்பட்ட அணைக்கட்டு கரை பகுதிகள் மீண்டும் சீர் செய்யப்பட்டு காணப்பட்டன.அவ்வாறு சீர் செய்யப்பட்ட போதும் தற்போது பெய்த மழையினால் மீண்டும் சேதமாகக் காணப்படுகின்றதை அவதானிக்க கூடியதாக உள்ளது. எனவே பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அணைக்கட்டு சிறிய மழையின் போதே இவ்வாறு சேதமாகிக் காணப்படுகின்றதால் பருவமழை ஆரம்பித்ததும் பாரிய அளவில் சேதமாகி ஆற்று நீரோடு கலந்து விடக்கூடிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

இவ்வாறு சேதமாகிக் காணப்படு கின்ற அணைக்கட்டின் கரைப்பகுதிகளை இயலுமான வரை கரையாமல் பாதுகாப்பதற் கான உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கவேண்டுமென பொது மக்களும் விவசாயிகளும் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-27)

## வைத்தியசாலையில் நாய்க்கடிக்கு இலக்காகும் துர்ப்பாக்கிய நிலை

(காரைநகர்)

காரைநகர் பிரதேச கிராமிய வைத்திய சாலைப் பிரதேசத்தில் உள்ள நாய் ஒன்று கடந்த வாரங்களில் பலருக்கு கடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலைக்கு செல்வோரையே குறித்த நாய் கடித்துள்ள அதே வேளை இச்சம்பவம் தொடர்பாக உரிய அதிகாரிகளிற்கு தெரிவித்தும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஓ-246)

## பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதி

பாம்புக்கடிக்கு இளக்காகிய குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ் . போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் குடமியன் வரணி தென்மராட்சியைச் சேர்ந்த கே. பிரபாகரன் (வயது 31) என்பவரே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் நேற் று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் நித்திரையின் போது பாம்புகடித்ததனால் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிசிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-7)



எவர்சைன் கல்வி நிறுவனத்தால் நடாத்தப்பட்ட மாபெரும் கல்விக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி எஸ்.பவானி நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், எவர்சைன் கல்வி நிறுவன இயக்குநர் எஸ்.ஜெயபாலசிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும், விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதனையும் படங்களில் காணலாம்.

# விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

07

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

மதுரையில் வைணவ சமயத்தாருக்குள்ளேயே, வேதாந்த தேசிகரின் சீடர்களுக்கும், மணவளா மாமுனியின் சீடர்களுக்குமிடையே போட்டி ஏற்பட்டது. கி.பி 1597 இல் சிதம்பரத்தில் சைவ-வைணவருக்கிடையே பூசல் ஏற்பட்டதாக பிமண்டா அடிகளார் குறிப்பிடுகிறார்.

மதுரையில் திருமலை நாயக்கரின் முயற்சியால் வடகலை, தென்கலை வைணவ ருக்கிடையே நிலவிய வேற்றுமை களையப்பட் டது.

இவர்கள் காலத்தில் காஞ்சிபுரம், நாகபட்டினம் போன்ற இடங் களில் பௌத்த சமயத்தவர்கள் வாழ்ந்துள்ளனர். இதற்கு ஆதாரமாக காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் விசயநகர் ஆட்சிக் காலத்தில் செதுக்கப்பட்ட பௌத்தசிற்பங்கள் உள்ளன. படைவீடு, சந்திரகிரி, ஜைனகாஞ்சி, செம்பை, கரம்பை, நாகர்கோவில் போன்ற இடங்களில் சமணக் கோயில்கள் இருந்தன. இவ்விடங்களில் இருந்த பௌத்த சமண மடங்களுக்குச் சொந்தமான நிலங்களைத் தேவதான நிலங்களான கிருஷ்ண தேவராயர் மாற்றினர் எனக் கருதப்படுகின்றது.

14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வைணவர்களால் துன்புறுத்தப்பட்டதாகச் சமணர்கள் விசயநகர மன்னர்களிடம் முறையிட்டபோது மன்னர் புக்கராயர் தலையிட்டு அவரவர் கொள்கைப்படி அவரவர் நடந்து கொள்ளும்படி இருசாராரையும் வேண்டி சமாதானப்படுத்தியுள்ளார்.

மதுரை சுல்தானியர் வைதீக மதத்தவரைத் துன்புறுத்தியபோது அவர்களை அடக்கியவர்கள் விஜயநகர வேந்தர்கள். ஆனால் இவர்கள் இஸ்லாமியர்களுக்கு எதிரிகள் அல்ல.

இஸ்லாமியர்களை ஆதரித்தனர். அவர்களைத் தம் இராணுவத்தில் சேர்த்தனர். நாகூர் தர்க்கா சிறப்பாக விளங்க உதவினர். கி.பி.1574 இல் மதுரை கோரிப்பாளையத்தில் முகம்மதியர்கள் சமயக் காரணங்களுக்காக நாயக்க மன்னரிடமிருந்து மானியங்கள் பெற்றனர். 1733 இல் மீனாட்சி அரசியார் ஒரு மசூதிக்கு நிலம் மானியமாக வழங்கினார்.

விஜயநகர -நாயக்கர் காலத்தில் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டது. 16 ஆம்நூற்றாண்டின் இறுதியில் கிறிஸ்தவ சமயப் போதகர்கள் தமிழகத்துக்கு வந்தனர். கிறிஸ்தவ சமயப்பரப்புப்பணிபோர்த்துக்கீசியரும், புனித பிரான்ஸிஸ் சேவியரும்(1545) வந்த பின்பே துரிதமடைந்தது.

நாயக்க மன்னர்களில் சிலரும்,, அவர்களது சிற்றரசர்களில் சிலரும், அவர்களது சிற்றரசர்களில் ஒருவரான கிழவன் சேதுபதியும் கிறிஸ்தவ பாதிரியார்க ளுக்கு இன்னல் விளைவித்தனர். ஜான் டிபிரிட்டோவைக் கொன்றன்ர்.

இருப்பினும் கிறிஸ்தவ பாதிரியார்கள் அயாரதுழைத்தனர். மன்னர்களின் ஆதரவையும் பெற்றனர். இதனால் அம்மதம் தமிழகத்தில் வேரூன்றியது.

வடமொழியையும் (சமஸ்கிருதம்), தெலுங்கு மொழியையும் இம் மன்னர்கள் பெரிதும் ஆதரித்த போதிலும் தமிழ் மொழி வளர்ச்சியில் எவ்விதத் தடங்கல்களும் ஏற்படுத்தவில்லை.

விஜயநகர நாயக்கர் கால கலைப்படைப்புக்கள்



தஞ்சை நாயக்கர் மாளிகை





இவர் தம் காலத்தில் தமிழகத்தில் தென்கோடியில் (தென்காசி) ஆட்சி செய்த (15-16 நூற்றாண்டுகளில் பாண்டிய வம்சத்தினர் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்தனர்.

விஜய நகரப் பேரரசர்களும், அவர்தம் கீழிருந்த நாயக்க மன்னர் சிலரும் இலக்கிய வல்லுநர்க ளாய்த் திகழ்ந்த னர்.

அவர்களது அமைச்சர்கள் கூட இலக்கியத்திலும் கல்வியிலும் அதிக ஆற்றல் கொண்டி ருந்தனர்.

சில நூல்கள் வடமொழியிலி ருந்து மொழி பெயர்க்கப்பட்டன. சில வடமொழி நூலின் மூலக் கருத்தை வைத்து தமிழில் தனியாக எழுதப்பட்டன. பல தமிழ் நூல்கள் இயற்றப்பட்டன.

இவர்கள் காலத்தில் சிற்றிலக்கியங்கள் பலதோன்றின. இவர்களது காலம் சிற்றிலக்கியங்களின் காலமெனவும் கருதப்பட்டது.

விஜயநகர மன்னர் முதலாம் புக்கரின் மைந்தர் குமாரகம்பணர், சுல்தான்களிடமிருந்து மதுரையைக் கைப்பற்றி விசயநகர் ஆட்சி யை நிறுவியது பற்றிக் கூறும் அவரது மனைவி கங்காதேவியால் எழுதப்பட்ட "மதுரா விஜயம்" என்னும் நூலே அவர் தம் ஆட்சியில் தமிழகத்தில் எழுதப்பட்ட முதல் இலக்கியப் படைப்பாகும். ஆனால்இது வடமொழிநூலாகும்.

விஜயநகர வெற்றி பற்றியும் கோயில்களில் நடைபெற்ற வழிபாட்டு நெறிகள் பற்றியும், இந்நூல் விரிவாக எடுத்துரைக்கின்றது. குமாரகம்பணரின் தமிழக வெற்றிச் சிறப்புக்கள் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன.

பேராசிரியர் கு. சேதுராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

" தொண்டை மண்டல சதகம்" என்ற நூலில் பென்று மண்கொட ஏகாம்பர நாத சம்புவராயர் இரட்டைப் புலவர்களை ஆதரித்தார் என்ற செய்தி காணப்படுகின்றது.

வட ஆற்காட்டைச் சேர்ந்தவரும் அச்சுதராயரின் அவைப்புலவருமான இராசநாத திண்டிமா என்பவர் "பாகவத சம்பு" வை இயற்றியதோடு அச்சுதராயரின் வாழ்க்கைச் சரிதத்தை விளக்கும் " அச்சுதராயப் யுதய" த்தையும் படைத்துள்ளார். ஞானப்பிரகாச தேசிகர் என்பவர் கிருஷ்ணதேவராயரைப் பற்றி " மஞ்சரிப்பா" என்ற நூலை எழுதினார்.

(தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

133



ஒபாமாவின் காப்புறுதித் திட்டம் டாக்டர்களின் கண்டனம், ஆஸ்பத்திரிச் செலவுகள், மருந்துச் செலவுகள் என்று பல நன்மைகளை நோயாளிகளுக்கு அள்ளித் தரலாம்.

இது பற்றிய முழு விபரங்களும் இன்னும் பேசிச் தீர்க்க வேண்டியுள்ளது. இத் திட்டம் வெளிவந்தால் அது ஒபாமா ஆட்சியின் மிகவும் பாரிய உள்நாட்டு திட்டமாவதோடு அவரின் ஆட்சியின் உரைகளாக, அளவு கோலாக நின்று எதிரொலிக்கும்.

அமெரிக்காவின் 300 மில்லியன் மக்கள் தொகையில் ஆக 50 மில்லியன் மக்களுக்குத் தான் காப்புறுதி இல்லையாயினும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் அமெரிக்கர்கள் டாக்டரிடம் போவதில் மிகக் கூடுதலான பணத்தைச் செல விடுகிறார்கள். அதாவது அமெரிக்கப் பொருளாதரத்தில் ஆறில் ஒரு பங்கு டாக்டர்களுக்கு செலவிடப் படுகின்றது.

நடைமுறையில் இருக்கும். சுகாதாரத் திட்டத்தின் கீழ் U.S.அரசாங்கம் மாஜிப் போர் வீரர்களுக்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழ்ப் பட்ட மக்களுக்கும், வயோதிபர்களுக்கும் தான் சுகதார / வைத்தியச்செலவை வழங்குகின்றது.

ஆனால் அமெரிக்கர்களில் பெரும்பாலோருக்கு அவர்கள் வேலை செய்யுமிடங்கள் கொடுப்பனவை செய்கின்றன. போ தாமை ஏற்பட்டால் மக்கள் பொறுக்க வேண்டும்.

விரைந்து வளரும் வாழ்க்கைச் செலவுகள் எல்லாவகையான வர்த்தகங்களையும் நலியச் செய்துவிட்டது.

ஆஸ்பத்திரிகளும் டாக்டர்களும் தங்களுக்குத் தரவேண்டிய காப்புறுதிக் கொடுப்பனவுகளை தரமுடியாது பின்னடிக் கின்றன. ஒபாமா இன்னும் ஒரு தசாப்தத்தில் அமெரிக்கர்கள் ஒவ்வொருவரும் தங்கள் உழைப்பின் ஒவ்வொரு $ 5 டொலரில் $ 1 டொலரை சுகாதார / வைத்தியச் செலவுகளுக்கு வழங்க வேண்டி ஏற்படும் என்றார். ஆகவே நான் அமெரிக்க அதிபராக இருக் கும்போது இந்த நிலையை நீடிக்க அனுமதிக்கமாட் டேன் என்று உறுதிபூண்டுள்ளனர்.

ஜம்பொன்

(தொடரும்)

# இலங்கைக்கு 'ஜி.எஸ்.பி பிளஸ்' சலுகையுடன் ஏனைய உதவிகளையும் வழங்கவும்

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் பேராயர் வேண்டுகோள்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை இலங்கைக்கு வழங்கி உதவிகளைச் செய்ய வேண்டும். அந்தச் சலுகையை மட்டுமல்லாது ஏனைய சகல உதவிகளையும் ஐரோப்பிய சமூகம் வழங்க வேண்டும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஐரோப்பிய ஒன்றியத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நட்பு ரீதியான உதவிகள் மூலமே உண்மையான சமாதானத்தைப் பெற்று நீதியை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் நிலைநாட்ட முடியும் எனவும் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேராயர் இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்துப் பல மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்நிலையிலேயே கொழும்பு பேராயர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்,

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை மட்டுமன்றி ஏனைய அனைத்து விதமான உதவிகளையும் இலங்கைக்கு சர்வதேசம் வழங்க வேண்டும். இனவாதம் காரணமாக ஏற்பட்ட யுத்தத்தினால் மக்கள் பாரியளவு பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

மேற்குலக நாடுகளின் நட்பு ரீதியான உதவிகள் மூலமே இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் ஒற்றுமை, கௌரவம், தனி மனித சுதந்திரம் போன்றவற்றை உறுதிப்படுத்த முடியும்.

மாறாக தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் இவற்றைச் செய்ய முடியாது. இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன என்பதனால் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-4)

# ஐ.நா. விசேட நிபுணர் அல்ஸ்டனை இலங்கை அரசு வரவழைக்க தயாரில்லை

## அவரது குற்றச்சாட்டுக்களும் நிராகரிப்பு என்கிறார் சமரசிங்க

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் பிலிப் அல்ஸ்டனை இலங்கைக்கு வரவழைப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை. அவர் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு எவ்விதமான நம்பிக்கையும் கிடையாது என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டதாக மேற்கொள்ளப்பட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்யுமாறு ஐக்கிய நாடுகள் சபை விடுத்த வேண்டுகோள்களை இலங்கை அரசாங்கம் அலட்சியம் செய்துவிட்டது என்று ஐ.நா.வின் விசேட நிபுணர் பேராசிரியர் பிலிப் அல்ஸ்டன் தெரிவித்துள்ளமை குறித்து வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் சிவில் யுத்தத்தின் இறுதி மாதங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் பல சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்கென இலங்கைக்கு செல்ல தாம் நீண்ட நாட்களாக அரசாங்கத்திடம் அனுமதி கோரி வருவதாகவும் பிலிப் அல்ஸ்டன் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து அமைச்சர் சமரசிங்க தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

முதலாவதாக ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் பிலிப் அல்ஸ்டன் முன்வைத்துள்ள குற்றச் சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் நிராகரிக்கின்றது. அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரை எந்தக் காரணம் கொண்டும் இலங்கைக்கு வரவழைக்க நாம் தயாரில்லை. பிலிப் அல்ஸ்டனை இலங்கைக்கு வரவழைப்பதைவிட வெறுமனே ஒருவரை அழைத்து வரலாம்.

காரணம் அவர் மீது எங்களுக்கு எந்தவிதமான நம்பிக்கையும் இல்லை. அவர் போன்றவர்கள் இலங்கை மீது சுமத்துகின்ற குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் மேற்கொள்கின்ற தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் ஊடாக பதிலளிக்க தயாராக இருக்கின்றோம்.

முக்கியமாக எமது நாட்டு விவகாரங்களில் பிலிப் அல்ஸ்டன் போன்றவர்கள் தலையிடுவதையும் கருத்து வெளியிடுவதையும் நாங்கள் விரும்பவில்லை. (ஓ-4)

# வட்டியில்லா கடன் அடிப்படையில் மசகு எண்ணெய் வழங்க ஈரான் இணக்கம்

## இலங்கை அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் ஈரான் அரசாங்கம், வட்டியில்லாக் கடன் அடிப்படையில் மசகு எண்ணெயை இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில், ஈரானுக்கான இலங்கைத் தூதுவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.எம்.ஸுஹைர் ஈரானிய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாகவே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஈரானுக்கு இராஜதந்திர விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மடி நிஜாத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையும் இலங்கைக்கு வட்டியில்லாக் கடன் அடிப்படையில் ஈரான் மசகு எண்ணெயை வழங்கியது.

இந்த வசதியை மேலும் நீடித்துக் கொள்வது தொடர்பிலேயே ஈரானிய எண்ணெய்க் கம்பனி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. பேச்சு வார்த்தையின் பயனாக 2010 ஆம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையும் வட்டியில்லாக் கடன் அடிப்படையில் இலங்கைக்கு மசகு எண்ணெய் வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்குத் தேவைப்படும் பட்சத்தில் மேலதிக சலுகை வட்டி அடிப்படையில் மசகு எண்ணெய் வழங்கவும் இப் பேச்சுவார்த்தையின் போது ஈரானிய அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வட்டியில்லாக் கடன் அடிப்படையிலான வசதிமூலம் ஏற்கனவே 2008 ஆம் ஆண்டு முதல் ஈரானிடமிருந்து இலங்கை 1.05 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மசகு எண்ணெயை இறக்குமதி செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-4)

# இலங்கையின் முன்னேற்றத்தை தாங்கிக் கொள்ளாத சர்வதேச சக்திகள் நாட்டுக்கு எதிராக சதி

## வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய முன்னேற்றம் அடைந்து வருவதை தாங்கிக் கொள்ள முடியாத சில சர்வதேச சக்திகள் நாட்டுக்கு எதிராக சதித்திட்டங்களை மேற்கொண்டுள்ளன.

அந்த சக்திகளின் உள்நாட்டு முகவர்களாக பலர் இலங்கையிலும் செயற்படுகின்றனர் என்று வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை கிடைத்தால் வரவேற்போம். ஆனால் கிடைக்காவிடின் நாம் அது குறித்து கவலையடைய வேண்டியதில்லை. சவால்களுக்கு முகம்கொடுத்து பொருளாதார தடைக்கற்களை கடந்த செல்ல வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

நாட்டின் பிரதான அரச வங்கிகள் வட்டி வீதங்களை இரண்டு வீதத்தினால் குறைத்துள்ளன. இது நாட்டின் பொருளாதார கட்டமைப்புக்கு சிறந்த முறையில் வலு சேர்க்கும் விடயமாகும். இதன்மூலம் மக்கள் குறைந்த வட்டி வீதங்களில் கடன்களை பெற்றுக் கொள்ளலாம். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செலவுகள் குறைவடையும்.

பணவீக்கமும் வட்டி வீதங்களும் குறைந்து காணப்படுவது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படும் பண்புகளில் ஒன்றாகும்.

இந்நிலையில் இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகும். எனவே வட்டி வீதம் குறைவடைகின்றமை மற்றும் பணவீக்கம் வீழ்ச்சி கண்டுள்ளமை என்பன ஆரோக்கியமான நிலைமையாகும். (ஓ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### மிளகரணை

Botanical Name- Toddalia asiatica
Family -Rutaceae
Engl -forest pepper
Sinh - kudumiris

பச்சை நிறமுடைய முட்களைக் கொண்ட ஏறுகொடித் தாவரமாகும். 15 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. நிறைய கிளைகளைக் கொண்டது. தண்டு 10 சென்றி மீற்றர்விட்டமுடையது. இதன் பட்டைகள் பழுப்பு கலந்து கபிலநிறம். அழுத்தமானது. அதிக எண்ணிக்கையான வளையங்களைக் கொண்டது.

இலைகள் ஒன்றுவிட்ட ஒழுங்கமைப்பு இலைக் காம்பு 1.5 -3 செ.மீ நீளமுடையது. நீள் வட்ட முட்டை வடிவ இலை. நுனி மழுங்கியது.1.8 -3.3 செ.மீ நீளம் .கரும்பச்சை நிற மினுமினுப்பானது.

பூக்கள் 3.8 -6mm விட்டம். பழுப்பு நிற பச்சை கலந்து மஞ்சள் நிறம் . பழங்கள் மஞ்சள் கலந்த சிவப்பு நிறமுடையது. வித்துக்கள் ஏராளம். நிறமற்ற சதையால் சூழப்பட்டது. பெரும்பாலும் இதன் இலைகளின்ஒரு நரம்புகளில்தான் முட்கள்காணப்படும். மிகுதிச் செடி முழுவதும்முட்கள்அடர்த்தியாக இருப்பதால் கையில் பிடிக்க முடியாது.

**இனவிருத்தியும் பரம்பலும்:**

சாதாரணமாக எங்கும் காணக்கூடிய பெருஞ்செடியாகும். புதர்கள், ஆற்றங்கரைகளில் வளரும். மிதமான செழிப்புள்ள இடங்களில் காணலாம். விதைகள் மூலமும் வேர்க்கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம்.



**மருத்துவப்பயன்கள்**

◆ இதன் இலைகளிலுள்ள முட்களைநீக்கி நன்றாக அரைத்து சுண்டைக்காயளவு வெறும் வயிற்றில்எடுக்க வயிற்றுவலி நீங்கும்.

◆ வெறும்இலைகளை இடித்து ஒரு டம்ளர் நீரிட்டு அதில் சிறிது இஞ்சியை நசுக்கிப் போட்டு காலை, மாலை இரு வேளை குடிக்க மூளைக்காய்ச்சல் தணியும். இதன் செடியின் பட்டையையும் மேற்படி முறையில் குடிநீரிட் டும் கொடுக்கலாம்.

◆ இதன் வேர்ப்பட்டை ஒரு பங்கும், மிளகு 6, சீரகம் சிறிதளவு கலந்து 4 டம்ளர் நீரிட்டு 1 டம்ளராக வற்றக் காய்ச்சி காலை வேளை குடித்துவர நாட்பட்ட வயிற்றோட்டம், தேகமெலிவு நீங்கும்.

◆ இதன்வேரை ஆமணக்கு எண்ணெயில் இட்டுக் காய்ச்சி வாதம் தொடர்பாக வரும் வீக்கங்களுக்கு மேற்பூச்சாக பூசி ஒத்தடம் கொடுக்க அவை குணமாகும்.

◆ இதன் இலையுடன் தூதுவளை, மொசுமொசுக்கை ஆகியவற்றை சேர்த்து துவையலாக்கி 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டுவர இருமல், ஆஸ்மா குணமாகும்.

◆ 20 கிராம் மிளகரணை வேர்ப்பட்டையை சிறு துண்டுகளாக்கி நறுக்கி ஒரு சிறு குடுவையினுள் போட்டு 250 மில்லிநீர்விட்டு 60 மில்லியாக சுண்டக்காய்ச்சி 30 மில்லி காலை, மாலை கொடுக்க இதனால்குளிர்சுரம் நீங்கும். தேகபலமுண்டாகும். நல்ல பசியும் ஏற்படும்.

◆ இதன் காய் வேர்ப்பட்டை முதலியவற்றை இடித்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு பிடிப்பு, வீக்கம், நோ உள்ள மூட்டுக்களில் தேய்க்க வீக்கம், நோ தணியும்.

**குறிப்பு :-**

ஏதாவது நோய்வாய்ப்பட்டு நோய் மாறிய பின்பும் தேகபலவீனம் இருப்பின் இதன் வேர்ப்பட்டைக்குடிநீர் 30 மில்லி அளவு காலை மாலை 40 நாட்கள் தொடர்ந்து எடுத்து வர நல்லபலனுண்டாகும். இதன் வேர்ப்பட்டையை நாமே சேகரித்துக் கொள்ளலாம். ஏனெனில் இதன் பரம்பல் அதிகமாக காணப்படுவதனாலாகும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)**
**சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம், கைதடி**

# சிறைகளில் உண்ணாவிரதம் அர்த்தமற்றது;

# இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை

## பிரதி நீதி அமைச்சர் புத்திரசிகாமணி

(கொழும்பு)

அரசியல் கைதிகள் என்று இலங்கையில் எவரும் இல்லை. குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களே சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைக் கைதிகள் உண்ணாவிரதம் இருப்பதன் மூலம் எந்தப் பயனையும் அடையமுடியாது என்று பிரதி நீதியமைச்சர் வி. புத்திரசிகாமணி தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள், பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையிலே அவர்கள் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிப்பது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் சொன்னார்.

சுமார் 15 வருடங்களுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகள், தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்வது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே பிரதி நீதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே வெலிக்கடை விளக்கமறியல் சிறைச்சாலையில் உள்ள 63 தமிழ் அரசியல் கைதிகள் போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

1993 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் மகசின் ஜி பிரிவில் 58 பேரும் மகசின் கே பிரிவில் 92 பேரும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் 17 பேரும் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் அநுராதபுரத்தில் 62 பேரும், யாழ்ப்பாணத்தில் 17 பேரும் என நாடு முழுவதிலும் 300க்கும் அதிகமான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் மேலும் கூறுகையில்,

கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள சகலரும் ஏதோ ஒரு வகையில் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களாகவே இருக்கின்றனர்.

இவ்வாறானவர்களை விடுதலை செய்வது இலகுவான காரியமல்ல. உரிய விசாரணைகளின் பின்பே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

ஒரே இரவுக்குள் அனைவரினது விடுதலையும் சாத்தியமாகப் போவதில்லை சட்ட அணுகுமுறைகளின் ஊடாகவே இது சாத்தியமாகும். கைதிகள் தமது விடுதலை குறித்து உண்ணாவிரதம் மேற்கொள்வதெல்லாம் அர்த்தமற்ற விடயங்கள்.

இவர்களை விடுவிப்பது தொடர்பிலும் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பிலும் நாம் விரிவாக ஆராய்ந்து வருகிறோம் என்றார். (ஓ-4)

# இலங்கை யுத்தம் தொடர்பான அறிக்கை அமெரிக்க காங்கிரசிடம் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கையின் யுத்தம் தொடர்பாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை அமெரிக்க காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் போர்க் குற்றங்கள் தொடர்பான தூதுவர் ஸ்டீபன் ரெப் இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இராஜாங்க திணைக்களத்தின் நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட திணைக்களத்தின் பேச்சாளர் இயன் கெலியிடம் அறிக்கை தொடர்பாக வினவப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த அவர் அறிக்கையில் அடங்கியிருக்கும் அட்க்கங்கள் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்டார். (ஓ-4)

# நவராத்திரி பாமாலை



## நாமகளே எமக்கருள் செய்வாய்

நாமகள் பூமகள் திருமகளென
நான்மறை போற்றும் நாயகியே
நவராத்திரி தினத்தில் உனைப்பணிந்தோம்
நற்றமிழ் கலைகளை நவின்றிடுவாய்



தேவரும் மூவரும் போற்றி நிற்கும்
தேவியே உன்னைச் சரணடைந்தோம்
பூவாலும் நாவாலும் உமைத் துதித்தோம்
நாமகளே எமக்கு அருள் செய்வாய்

ச.தாரணி, அ.த.க.பாடசாலை கைதடி

## நலம் பல நல்கிடும் நவராத்திரி

ம்ப்பெரும் தேவிகளின் அம்சமாய் விளங்கும் அன்னை
இமயம் முதல் குமரி வரை
உலகெங்கும் கொலுவிருக்கிறாள்
சிவனுக்கோ ஓரிரவு சிவராத்திரி
சக்திக்கோ ஒன்பது நாள் நவராத்திரி
அகிலாண்ட நாயகியான பராசக்தியானவள்
வீரம், செல்வம், கல்வி எனும் மூவகைப் பேறளித்து
நலம் பல நல்கிடும் நவராத்திரியே !

நகுலேஸ்ரன் வனிதா,யாழ்/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.

## கருணையுடன் எனைக்காத்திடுவீரம்மா

நவசக்திகளின் திருவிழாவாம் நவராத்திரி
தவமிருந்து பெற்றிடுவோம் அருளோடு
பலமும் பணமும் படிப்பும்
பலனோடு பெற்றிடுவோம் சக்தியிடம்

கலைகள் மூன்றையும் தரும் அரசிகளே
காலமெல்லாம் துதிபாடி நான் -உம்
காலடியில் கிடந்து கவி படிப்பேன்
கருணையுடன் எனை காத்திடுவீரம்மா

வி.பவிதா,யா/ வல்லை சிவகுரு வித்தியாசாலை


(தொழில் வாய்ப்பு)

JOHN AMBULANCE SRI LANKA

நோயாளர் பராமரிப்பாளர் தேவை

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண் ,பெண் பராமரிப்பாளர்கள் தேவை. சேவையில் ஈடுபடுவோர்க்கு நாள் ஒன்றிற்கு ரூபா 500 ஊக்குவிப்பாக வழங்கப்படும். இச் சேவையில் இணைய விரும்புவோர் 27.09.2009 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் போதனா வைத்திய சாலையில் உள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் வரவும்.

மேலதிக விபரங்களுக்கு
தொ.பே.இல. 021 222 3166

சென்ஜோன் அம்புலன்ஸ்
யாழ்ப்பாணம்.

(3558)

அவசர அம்புலன்ஸ் தொடர்பு இல 021 321 4444


# அரசுக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணும் அறிக்கைகளை வெளியிட வேண்டாம்

## முன்னாள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை உண்டு பண்ணும்வகையிலான அறிக்கை களை வெளியிட வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவிடம் தாம்கோரியதாக மேல்மாகாண ஆளுநர்அளவி மௌலானா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சர்வதேச நாடுகளிடம் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை தெரிவிக்க வேண்டாம் என தாம்கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படு வதற் காகவும் தமக்கே போதிய அளவு பாதுகாப்பு இல்லை எனவும் அண்மையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்தியாவில் வைத்து தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பின்பற்றி நாட்டை கேவலப்படுத்தும் சூழ்ச்சித்திட்டங்களுக்கு துணைபோக வேண்டாம்என அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டாரநாயக்க குடும்பத்தார் இலங்கைக்கு களங்கம்ஏற்படும் வகை யில் செயற்படக்கூடாது என அவர் தெரி வித்துள்ளார்.

எதிர்வரும்26 ஆம் திகதி நடை பெறவுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த நிகழ்வு தொடர்பான ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)







வட்டுக்கோட்டை விவசாயிகளினால் அரசடி கொத்துத்துறை சவாரித் திடலில் நடாத்தப்பட்ட மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் மாடுகள் போட்டிக்குத் தயாராக நிற்பதையும், சவாரிப் போட்டி நடைபெற்றுக்கொண்டிருப்பதையும், கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: வட்டு. அஜித், கோபி)

# மும்பைத் தாக்குதல் சதிக்கு காரணமான சயீதுவை வீட்டுக் காவலில் வைக்க உத்தரவு

(லாகூர்)

மும்பைத்தாக்குதல் சதிக்கு மூலகாரணமான ஜமாயத் உத் - தாவா அமைப்பின் தலைவர் ஹபீஸ் முகமது சயீதுவை வீட்டுக் காவலில் வைக்க பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. ரம்ழான் தொழுகையில் பங்கேற்கவும் தடைவிதித்தது.

மும்பையில் கடந்த ஆண்டு பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல் சதிக்கு பாகிஸ்தானில் செயல்படும் ஜமாயத் உத் -தாவா அமைப்பின் தலைவர் ஹபீஸ் முகமது சயீது காரணம் என இந்திய அரசு குற்றம் சாட்டியது.

இதுதொடர்பான ஆதாரங்களையும் பாகிஸ்தான் அரசிடம் கொடுத்தது. அதைப் பரிசீலித்த பாகிஸ்தான் அரசு கடந்த டிசம்பர் மாதம் சயீதுவை வீட்டுக் காவலில் வைத்தது. ஜமாயத் உத் -தாவா அமைப்பை பயங்கரவாத அமைப்பாக ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் அறிவித்ததையடுத்து இந்த நடவடிக்கையை எடுத்தது. ஆனால் கடந்த யூன்மாதம் சயீதுவை குற்றமற்றவர் எனக்கூறி லாகூர் உயர்நீதிமன்றம் விடுதலைசெய்தது. சயீதுவின் விடுதலைக்கு இந்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது. அமெரிக்க அரசிடமும் புகார் தெரிவித்தது. இந்நிலையில் சயீதுவை நேற்றுமுன்தினம் மீண்டும் வீட்டுக்காவலில் வைக்க பாகிஸ்தான்அரசு உத்தரவிட்டது.

லாகூரின் ஜோகர் டவுன் பகுதியில் அவரின் வீட்டைச் சுற்றி பொலிஸார் குவிக்கப் பட்டனர்.

ரம்ழான் தொழுகையில் பங்கேற்கவும் அதை தலைமையேற்று நடத்தவும் அவருக்கு தடைவிதிக்கப்பட்டது.

இருப்பினும் சயீது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதை பாக்.அரசு உறுதி செய்யவில்லை. உயர் பொலிஸ் அதிகாரி இதுபற்றிக் கூறுகையில், சயீதுவின் நடமாட்டத்திற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடாவி ஸ்டேடியத்தில் அவர் ரம்ழான் தொழுகையில் பங்கேற்கவும் தடையுள்ளது என்றார். மூன்று நாட்களுக்கு முன் பைசாலாபாத் நகரில் சயீதுக்கு எதிராக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இரண்டு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன.

கடந்தமாதம் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், மக்களிடம் வன்முறையைத் தூண்டி விடும் வகையில் பேசியதற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆனால் சயீதுவின் மருமகன் காலித் வாலித் பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் பாதுகாப்புக் கருதி வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்று அரசு கூறியிருப்பதாக தெரிவித்தார். சயீது கைதா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை. ஜிகாத் போரை ஆதளரித்த அவரது பேச்சுக்கு தடையாக இந்த நடவடிக்கை என்றும், மற்றபடி மும்பை சம்பவத்திற்கு என்று குறிப்பிட்டு கைதுசெய் யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஆகவே, மும்பைத் தாக்குதல்குறித்து சயீது வைத்திருக்கும் ஆதாரங்களைப் பெற்று, அதனடிப்படையில், வழக்கு தொடருமா பாகிஸ்தான் அரசு என்று இன்னமும் தெரியவில்லை.

சயீது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டது குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூறுகையில், " மும்பை தாக்குதலில் சயீதுக்கு தொடர்புள்ளதால், அவரிடம் பாகிஸ்தான் அரசு விசாரணை நடத்தவேண்டும். அவரின் பங்கை உறுதி செய்யவேண்டும். அவருக்கு தொடர்புள்ளது என்பதற்கான ஆதாரங்களை பாகிஸ்தானிடம் கொடுத்துள்ளோம் என்றார்.

இதற்கிடையில், ஜமாயத்-உத்-தாவா அமைப்பின் தகவல் தொடர்பாளர் யாக்யா முஜாகித் கூறுகையில், ரம்ழான் தொழுகை நடத்தக் கூட, சயீதுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் இந்திய அரசின் நெருக்கடி காரணமாகவே பாகிஸ்தான் அரசு அவரை வீட்டுக்காவலில் வைத்துள்ளது என்றார். (ஓ-4)

## சூடானில் பழங்குடி மக்களிடையிலான கலவரத்தில் 100 பேர் பலி

(கர்டோம்)

தென்கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள சிறிய நாடு சூடான். எகிப்து நாட்டின் பிடியில் இருந்த இந்த நாடு 1956 ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.

சூடான் நாட்டில் லூநியூர் , ஜாங்லி என்ற இருவகையான பழங்குடிகள் உள்ளனர் . இவர்கள் அடிக்கடி ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் நடத்துகிறார்கள்.

கடந்த மாதம் இவர்கள் மோதிக்கொண்டதில் 185 லூநியூர் பழங்குடிகள் கொல்லப் பட்டனர்.

இதனால் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் கடுமையான கோபத்துடன் பழிக்கு பழி வாங்க சரியான நேரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இருதரப்பிற்கும் இடையில் திடீர் மோதல் ஏற்பட்டது அது பெரும் கலவரமாக மாறியது.

லூநியூர் பழங்குடிகள் ஜாங்லி இனத்தவர்கள் வாழும் கிராமங்களைச் சூழ்ந்து தாக்கினார்கள்.

இதில் ஜாங்லி இனத்தைச் சேர்ந்த சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர் என்ற தகவல்களை சூடானில் உள்ள ஐ.நா சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பழங்குடி இன மக்களின் மோதல்களில் இந்த ஆண்டு மட்டும் 2ஆயிரம் பேர் சூடானில் கொல்லப்பட்டுள்ளனர். (ஓ-4)

## ஏமன் நாட்டில் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் 140 பேர் சுட்டுக்கொலை

(சானா)

ஏமன் நாட்டில் அரசுக்கு எதிராக ஒரு தீவிரவாத கும்பல் செயல்பட்டு வருகிறது.

இக்கும்பல்அங்கு அடிக்கடி தாக்குதல்களை நடத்திவருகிறது.

இந்த நிலையில் வடக்கு ஏமனில் உள்ள சாதா நகரில் அரசு தங்கும் விடுதிகள் மற்றும் தலைமை அலுவலகங்களில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் அவர்கள் தங்கள் தாக்குதல்களைத் தொடங்கினார்கள்.

இவர்களின் திட்டத்தை முன்கூட்டியே அறிந்த இராணுவத்தினர் எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள். இதில் தாக்குதலில் ஈடுபட்ட 140 தீவிர வாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர் களின் உடல்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)




## ஜப்பானில் பறக்கும் ரயிலை நிறுத்திய பெண் குழந்தை



ஜப்பானில் உள்ள டோக்கியோவில் சுசாக நகர் பகுதியில் அதிவேக பறக்கும்ரயில் சென்று கொண்டிருந்தது. அப்போது தண்ட வாளத்தின் குறுக்கே தத்தித் தவழ்ந்து நடைபயிலும் ஒரு பெண்குழந்தை நின்று கொண்டிருந்தது.

குழந்தை நிற்பதை ரயில் எஞ்சின் டிரைவர் பார்த்து விட்டார். உடனே இரக்க மனம் படைத்த அவர் மெதுவாக ரயில் எஞ்சினின் வேகத்தைக் குறைத்தார் .

பின்னர் தண்டவாளத்தில் நின்றி ருந்த குழந்தையின் அருகே 50 சென்றிமீற்றர் இடைவெளியில் அந்த ரயிலை நிறுத்தினார். இதனால் அந்த ரயில் மோதா மல் அக்குழந்தை உயிர் தப்பியது. இது மிகவும் ஆச்சரியப்படத்தக்க விடயம்என அந்த டிரைவரை பயணிகள் பாராட்டினர். விசாரணையில் பறக்கும் ரயிலை நிறுத்திய அக்குழந்தை வீட்டில் இருந்து காணாமல் போய் இருந்தது தெரிய வந்தது. (ஓ-6)

## ஆப்கானிஸ்தானில் அண்மைய நிகழ்வுகள்; அமெரிக்கா தன் குறிக்கோளை அடைவது கடினம்

### ஜனாதிபதி ஒபாமா



(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில், சமீபத்திய நிகழ்வுகள், அப்பகுதியில் அமெரிக்கா நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளதை காட்டுகிறது என அந்நாட்டு அதிபர் ஒபாமா நேற்று முன்தினம் தெரிவித்தார். அல்-குவைதா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்டேலடனை பிடிப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த அமெரிக்க அதிபர் ஒபாமா கூறுகையில், ஆப்கானிஸ் தான் தேர்தல் மற்றும் பாகிஸ்தானில் மாறி வரும் சூழ்நிலைகள் போன்றவை, நமது குறிக்கோளை அடைவது கடினம் என்பதையே காட்டுகிறது. பின்லேடனைக் கண்டு பிடித்துக் கொள்வதில் முந்தைய அரசின் ஆர்வத்தை நான் சந்தேகிக்கவில்லை.

அல் -குவைதாவினரை மையப்படுத்தி தாக்கி அந்த அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை பிடிப்பதுதான் வேலையென்றால் அல்-குவைதாவை ஓடவைப்பதுடன் ஒசாமாவைக் கொல்லும் திட்டமும் சுலபம் தான். ஆனால் வேறு திட்டங்களும் அதனுடன் சேரும் வகையில் நமது உத்திகள் அமைந்தால் அது சிக்கல் ஏற்பட்டு ஏன் அங்கே நாம் இருந்து செயல்பட வேண்டும் என்ற கேள்வி எழுந்துவிடும். ஆப்கானில் சமீபத்தில் நடந்த தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளது குறித்து தகவல் கள் வந்துள்ளன.

அவை குறித்து விசாரணை நடக்கிறது. எவ்வளவு முறைகேள் நடந்துள்ளன. அவற்றால் தேர்தல் முடிபுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து தெரிந்துகொள்ள சில வாரங்கள் வரை காத்திருக்கவேண்டும் . அதற்குப் பின் அந்த அரசு நம்முடன் எந்த அளவில் ஒத்துழைப்பார்கள் என்பதை முடிபுசெய்தாக வேண்டும்.

அமெரிக்க மக்களின் பாதுகாப்பு எனக்கு முக்கியம். அல்-குவைதாவினர் தற்போது நமக்கு தீங்குவிளைவிக்க முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு முறை உத்தரவில் கையெழுத்திடும்போதும் ஆப்கான் அனுப்பும் இளைஞர்களின் பெற்றோருக்கு பொறுப்புடன் பதிலளிக்க வேண்டிய கடமை உள்ளது. அந்த இளைஞர்கள் அனைவரும் சரியான காரணத்திற்காகவே அங்கு அனுப்பப்படுகின்றனர் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் இவ்வாறு ஒபாமா கூறினார். (ஓ-4)

## பூட்டானில் நிலநடுக்கம் 3 இந்தியர் உட்பட 10 பேர் பலி

(திம்பு)

பூட்டானில் திங்கட்கிழமை நிகழ்ந்த கடுமையான நிலநடுக்கத்தில் வீடுகள் இடிந்தது உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களில் 10 பேர் உயிரிழந்தனர். இதில் மூவர் இந்தியர்.

பூட்டான் தலைநகர் திம்புவுக்கு கிழக்கே 180 கிலோமீற்றர் தொலைவில் நிலநடுக்கம் மையம்கொண்டிருந்ததாக புவியியல் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவான இந்த நிலநடுக்கம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உணரப்பட்டன.

தலைநகர் திம்புவுக்கு அருகில் உள்ள பகுதிகளில் ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாயின. மேலும் மலைப்பகுதியில் இருந்த பாறைகளும் உருண்டோடின. இச் சம்பவங்களில் இந்தியர் மூவர் உள்ளிட்ட 10 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ-4)

# தமிழக மக்களின் உரிமையைப் பாதுகாப்பதில் கருணாநிதி உறுதியற்ற தன்மையைக் கொண்டுள்ளார்

## ஜெயலலிதா கண்டனம்



(சென்னை)

ஒரு மாநிலத்தின் முதல்வராக இருந்து மத்திய அமைச்சரவையில் பங்கு வகித்து கேரள அரசிற்கு மத்திய அரசு அனுமதி அளித்து இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்ளாமல், தமிழக மக்களை ஏமாற்றும் வகையில் அறிக்கை விடுவது கண்டனத்திற்குரியதென அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் கச்சதீவு, காவிரி நதி நீர்ப் பங்கீட்டில் நமக்குள்ள உரிமைகள் எல்லாம் தமிழக முதல்வர் கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் தான் பறிபோயின. தமிழர்களின் உரிமைகளை தட்டிக் கேட்க கருணாநிதி தயங்குவதால் தான் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு தடுப்பணை கட்டும் பணிகளை துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

தற்போது கேரள அரசும் முல்லைப் பெரியாறு அணையின் குறுக்கே 300 கோடி ரூபா மதிப்பில் புதிய அணைகட்ட திட்டமிட்டுள்ளது.

மத்திய அரசின் ஆதரவுடன் இந்தத் திட்டம் 3 ஆண்டுகளுக்குள் முடிக்க திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வந்துள்ளன.

கேரளாவிலும் மத்தியிலும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட அரசுகள் ஆட்சியில் இருந்தாலும், தமிழக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தவறு என்று தெரிந்தும் கேரள அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழகத்திலும், மத்தியிலும் ஒருமித்த கருத்துக்களைக் கொண்ட அரசுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் கருணாநிதி உறுதியற்ற தன்மையைக் கொண்டுள்ளார் என்பது கேரள அரசும், மத்திய அரசும் நன்கு அறியும்.

அதனால் தான் மத்திய அரசின் ஆதரவோடு கேரள அரசு புதிய அணைகட்டும் திட்டத்தை தீட்டியுள்ளது. புதிய அணைகட்டுவதற்கு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள கேரள அரசிற்கு அனுமதி கொடுத்துள்ளதாக மத்திய சுற்றுச் சூழல் அமைச்சர் ஜெயராம் ரமேஷ் அறிவித்து 3 நாட்களுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில் இதைக் கருணாநிதி எதிர்ப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தன்னுடைய கேள்வி - பதில் அறிக்கையில் "முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை மேல் நீதிமன்றில் நிலுவையில் உள்ளதை மத்திய அரசு அறியும் எனவே கேரள அரசிற்கு அனுமதி கொடுத்திருக்காது என்று நம்புகிறோம் என்று கூறியிருக்கிறார்.

ஒரு மாநிலத்தின் முதல்வராக இருந்து கொண்டு மத்திய அமைச்சரவையில் பங்கு வகித்துக் கொண்டு கேரள அரசிற்கு மத்திய அரசு அனுமதி அளித்து இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்ளாமல் தமிழக மக்களை ஏமாற்றும் வகையில் அறிக்கை விடுவது கண்டனத்திற்குரியது.

கேரள அரசிற்கு மத்திய அரசு தந்த அனுமதியை அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிற போது மத்திய அமைச்சர் பதவிகளை தூக்கி எறிந்துவிட்டு மத்திய அரசிற்கு எச்சரிக்கை கொடுக்க வேண்டியது தானே? முல்லைப் பெரியார் அணைப் பிரச்சினையை அலட்சியம் செய்தால் கிடைத்துக் கொண்டிருக்கின்ற தண்ணீரும் தமிழகத்திற்கு வராமல் போய்விடும் சூழ்நிலை ஏற்படும்.

முல்லைப் பெரியாறு அணையை ஒட்டி உள்ள பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்படும் ஆபத்து வரும் முன் அதைத் தடுத்து நிறுத்த தி.மு.க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மக்களின் உரிமை பறிபோவதை தடுத்து நிறுத்த அ.தி.மு.க மாபெரும் போராட்டத்தில் ஈடுபடுமெனத் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# இராமேஸ்வர மீனவர்களின் வேலை நிறுத்தம் 5 ஆவது நாளாக நீடிப்பு

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை நடத்தி வரும் தாக்குதலை கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் 5 ஆவது நாளாக நேற்று முன்தினம் தொடர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில மாதங்களாக மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குவதும் அவர்களைப் பிடித்துச் செல்வதும் அடிக்கடி நடக்கிறது.

பேச்சுவார்த்தைகளை அடுத்து 21 நாட்கள் நடந்த வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப் பட்டது.

இதற்கிடையே கடந்த 16 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 21 மீனவர்களையும் 5 விசைப் படகுகளையும் இலங்கை கடற்படையினர் பிடித்துச் சென்றனர்.

இவர்களை விடுவிக்கக் கோரி அன்று முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் 5 நாளாக போராட்டம் நீடித்தது. (ஓ-4)




# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய மாநில அரசுகளை குறை கூறுவதிலேயே காலம் கடத்துகின்றனர்

## முதல்வர் கருணாநிதி

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இங்கேயுள்ள சிலர் மத்திய மாநில அரசுகளை குறைசொல்லிக் கொண்டே காலத்தை தள்ளிக் கொண்டிருக்கிறார்கள் என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து திங்கட்கிழமை அவர் வெளியிட்டுள்ள கேள்வி பதில் அறிக்கையில் கூறியுள்ளதாவது,

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக நான் கடிதம் எழுதினேன். இதோடு நிற்காமல் திமுக மற்றும் காங்கிரஸ் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த எம்பிக்கள் பிரதமரையும் சோனியா காந்தியையும் சந்தித்து நமது கோரிக்கையை விளக்கவுள்ளனர்.

மத்திய மாநில அரசுகள் இந்த அளவுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் செயல்பட்டு வந்த போதிலும் இங்கேயுள்ள ஒரு சிலர் திரும்பத் திரும்ப மத்திய மாநில அரசுகளை குறை சொல்லிக்கொண்டே காலத்தை தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நான் எழுதிய கடிதத்தைத் தொடந்து மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்தி வந்துள்ளது.

இலங்கைத் தமிழர்களை மீள்குடியமர்த்துவதும் மறுவாழ்வு அளிப்பதும் இலங்யையில் உள்விவகாரம் என்று விட்டுவிட இந்தியா தயாராக இல்லை.

மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் அளித்த கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பிரதமர் தேசிய பாதுகாப்பு ஆலோசகரை அழைத்து அதிபர் ராஜபக்ஷவிடம் இந்தியாவின் உணர்வுகளை அப்படியே தெரிவிக்குமாறு கூறியிருந்தார்.

அதன்விளைவாக இலங்கை அரசின் அதிகாரிகள் அவசரமாக கூடி தமிழர்களின் மறுவாழ்வு தொடர்பான நடவடிக்கைகள் எந்த நிலையில் இருக்கின்றன என ஆய்வு செய்தனர் என்று தெரிவித்துள்ளார். (ஓ-4)

# இலங்கைத் தமிழர் பிரச்சினையை திசைதிருப்ப கருணாநிதி முயற்சி

## நெடுமாறன் குற்றச்சாட்டு

(சென்னை)

உயிருக்கு ஆபத்து என்று கூறி இலங்கைத் தமிழர் பிரச்சினையை முதல்வர் கருணாநிதி திசைதிருப்ப முயல்கிறார் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து திங்கட்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் அகதி முகாம்களில் வதைபடும் 3இலட்சம் இலங்கைத் தமிழர்களைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் உயிருக்கு ஆபத்து என்று ஓலமிடும் முதல்வர் கருணாநிதியின் செயலால் உலகத் தமிழர் வேதனையடைந்துள்ளனர்.

அதனைச்சுட்டிக்காட்டியதற்காக என்மீது பாய்கிறார். குண்டர் சட்டத்தைக் காட்டி மிரட்டுகிறார்.

தமிழர்களின் வெறுப்புக்கும், கோபத்துக்கும் ஆளாகும்போதெல்லாம் தனது உயிருக்கு ஆபத்து என்று கூக்குரல் எழுப்பி பிரச்சினையை திசை திருப்ப முயல்வது முதல்வர் கருணாநிதிக்கு கைவந்த கலையாகும்.

இதுபோன்ற நாடகங்களை எல்லாம் நிறுத்திவிட்டு முகாம்களில் உள்ள தமிழர்களை மீட்பதற்கு உண்மையான நடவடிக்கைகளை முதல்வர் மேற்கொள்ளவேண்டும். முள்வேலி முகாம்களில் வதைப்படும் தமிழர்களை மீட்க உருப்படியான எதுவும் செய்யாமல் கண் துடைப்பு முயற்சிகளில் பிரதமர் மன்மோகன் சிங் கும், முதல்வர் கருணா நிதியும் தொடர்ந்து ஈடுபட்டு வருவது கண்டிக்கத் தக்கது.



ஐ.நா.அதிகாரி லின் பாஸ்கோ அகதி முகாம்களை நேரில் பார்வையிட்டு உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளார். ஆனால் முதல்வர் கருணாநிதி தில்லிக்கு கடிதம் எழுதுவதும், பிரதமர் சார்பில் அதிகாரிகள் இலங்கை அதிபருக்கு கடிதம் எழுதுவதுமான நாடகம் தொடர்கிறதே தவிர, ஈழத்தமிழர்களுக்கு விடிவுகாலம் பிறக்கவில்லை.

முகாம்களில் உள்ள தமிழர்களை உடனடியாக விடுதலை செய்யாவிட்டால் இலங்கை மீது உலக நாடுகள் பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை ஐ.நாவில் இந்திய அரசு கொண்டு வரவேண்டும். அப்போதுதான் இந்திய அரசின் மீது தமிழர்களுக்கு நம்பிக்கை பிறக்கும் என்று நெடுமாறன் கூறியுள்ளார். (ஓ-4)

# பாக். படையினர் எல்லையில் அத்துமீறல் ; பயங்கரவாதிகள் என்கிறார் இராணுவ மேயர்

(ஜம்மு)

காஷ்மீர் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள எல்லைப் பகுதியில் இந்திய இராணுவ நிலைகள் மீது பாகிஸ்தான் படையினர் கடந்த ஞாயிறன்று துப்பாக்கிச் சூடு நடத்தினர். 135 ரவுண்டுகளுக்கு மேல் சுட்டனர்.

இருப்பினும் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. பாகிஸ்தான் இராணுவத்தின் ஒன்பது நிலைகளில் இருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு 7.55 முதல் 8.20 வரை இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இருப்பினும் இந்தியப் படைகள் பதில் தாக்குதல் நடத்தவில்லை. பாகிஸ்தான் பகுதியில் உள்ள ஒவ்வொரு நிலைகளில் இருந்தும் 15 ரவுண்டுகள் சுடப்பட்டன.

இந்தத் துப்பாக்கிச் சூடு தொடர்ந்தால் இந்திய தரப்பிலும் தக்க பதிலடி கொடுக்கப் படும் என பிரிகேடியர் ஜெனரல் குர்தீப்சிங் பூரி கூறியுள்ளார். இதன்மூலம் இந்த மாதத்தில் பாக். படையினர் இரண்டாவது முறையாக போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளனர்.

ஆனால் பாகிஸ்தான் இராணுவ மேஜர் இதை மறுத்துள்ளார். பங்கரவாதிகள் தான் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். பாக். இராணுவத்திற்கு இதில் எந்தத் தொடர்பும் இல்லை என அவர் கூறியுள்ளார். (ஓ-4)

# ஒரு மாதத்தில் ஐந்து நிலநடுக்கங்கள் ; வடகிழக்கு மாநிலங்களில் பெரும் பீதி

(கோல்கட்டா)

வடகிழக்கு மாநிலங்களில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. அசாம் மேகாலயா உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் நேற்று முன்தினம் நில நடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 6.2 ஆக பதிவானது. நல்போனி, பாக்ஷா, காம்ரூப் ஆகிய இடங்களில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

இந்த பகுதிகளில் வசித்த மக்கள் வீடுகளை விட்டு, பீதியுடன் வெளியேறினார். அசாமில் நேற்று முன்தினம் மதியம் 2.24 மணி, அதற்குப் பின் 2.42 மணிக்கும் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக மக்கள் வீடுகளை விட்டு ஓடி வெளியே பீதியுடன் வந்தனர்.

அசாம் தலைநகர் கவுகாத்தியில், சில வீடுகளில் நெரிச்ல் காணப்பட்டது. இதேபோல் மேற்கு வங்க மாநிலத்தின் வடக்கு பகுதிகளிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது. மேற்கு வங்கத்தில் உள்ள கூச் பீகாரில் ஜன்னல் கதவுகள் அதிர்ந்தன என்று பலரும் தெரிவித்தனர்.

இதனால் உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்பட்டதாக எந்த தகவலும் இல்லை. வடகிழக்கு மாநிலங்களில் கடந்த ஒரு மாதத்திற்குள் இதுவரை ஐந்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

இதன் எதிரொலியாக வங்க தேசத்திலும் லேசான நில அதிர்வு இருந்ததாகக் கூறப்பட்டது. (ஓ-4)

# சனிப்பெயர்ச்சி 26.09.2009 முதல் 14.11.2011 வரை உங்களுக்கு எப்படி?

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்)**

**நாலில் வந்தார் சனிபகவான்! நாளும் இனிமேல் சுபவிரயம்!**

**சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தங்கள் இயல்புகளை மாற்றிக் கொள்ளும் மிதுன ராசி நேயர்களே!**

மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்வதில் வல்லவர்களாக விளங்குவீர்கள். மனதில் பட்டதை மறைக்காமல் பேசிவிடுவீர்கள். மற்றவர்களுக்கு வலியச் சென்று உதவுகின்ற எண்ணமும் உங்களுக்கு உண்டு. சவால் விடுவதையும் அதை சமாளிப்பதையும் கைவந்த கலையாகக் கொண்டவர் நீங்கள்.

ஒரே கருத்தை நீங்கள் ஆதரித்தும் பேசுவீர்கள். மறுத்தும் பேசுவீர்கள். வேகமான சிந்தனை, வேகமான செயற்பாடு, வேகமான வளர்ச்சி என்பது உங்களது நோக்கமாகும்.

புதனின் பலத்தைப் பொறுத்தும், அதன் பாத சார அடிப்படையைப் பொறுத்தும் தான் உங்கள் வாழ்க்கை அமைகிறது. ராசிநாதன் புதன் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமாகவும் விளங்குவதால், பாதி வாழ்க்கைக்கு மேல் தான் திறமை பளிச்சிடும் சூழ்நிலை அமையும். செல்வம் சேர்ப்பதிலும் குறிக்கோளாக இருப்பீர்கள்.

உங்கள் சுய ஜாதகத்தை ஆராய்ந்து புதன் இருக்கும் சாரபலம் அறிந்து அதற்குரிய பரிகாரங்களைச் செய்து கொண்டால், தாக்குதல்கள் ஏற்படாது. தனவரவு தாராளமாக வந்து சேரும், கூக்குரல்கள் மாறும். குதூகலம் இல்லத்தில் குடியேறும். ராசிநாதன் புதனை 'மாமன்காரகன்' என்று வர்ணிப்பர். எனவே, மாமனோடு நீங்கள் சேர்ந்து செய்யும் வழிபாடு மகத்தான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

நவாம்சத்தில் புதன் இருக்கும் நிலையை அறிந்து கொண்டு அதைப் பார்க்கும் கிரகமும், இணைந்த கிரகமும் எது என்பதை ஆராய்ந்து அவைகளுக்கு ஏற்ற விதத்தில் வரும் எண்ணாதிக்கத்தில் உங்கள் பெயரையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால் எதிர்காலம் இனிமையாக அமையும். எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும்.

"உபய" ராசியாக உங்கள் ராசி விளங்குவதால் 'அபயம்' அளித்தவர்களே உங்களுக்கு எதிரியாகலாம். எனவே வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் பொழுது, சண்டை, சச்சரவில்லாமல் சந்தோஷத்தையே 24 மணி நேரமும் காண திருமணப் பொருத்தம் பார்த்து வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பது நல்லது. பொருத்தம் இல்லையேல் வருத்தம் குடியேறும்.

அருளாளர்கள் அல்லது ஆன்மீகப் பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் முன் வைத்த காலை பின் வைக்காமல் இருக்கலாம். இப்படிப்பட்ட உங்களுக்கு சனிப் பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சி தானா? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**அர்த்தாஷ்டமச் சனியின் தொடக்கம் அதனால் வந்திடும் இடமாற்றம்!**

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த குணங்களைப் பெற்ற உங்களுக்கு வரும் சனிப்பெயர்ச்சி, 'அர்த்தாஷ்டமச்சனி' யாக வருகிறது. இது 'அஷ்டமத்துச் சனியில் பாதி பங்கு வலிமையுடையது. எனவே, அது கடுமையாக இருக்குமோ என்று நீங்கள் பயப்பட வேண்டாம். தாக்கும் கிரகமல்ல சனி, உங்களை காக்கும் கிரகம் தான் சனி என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

உங்கள் ராசிக்கு 8 மற்றும் 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி விளங்குகிறார். 'ஆயுள்காரகன்' சனி ஆயுள் ஸ்தானாதிபதியாகவும் விளங்குவதால், சனியால் ஒரு போதும் பெரிய பாதிப்புகள் ஏற்படாது. பிரச்சினைகளை உருவாக்கி நல்ல முடிபுகளை கொண்டு வந்து சேர்க்கும். இடமாற்றம், வீடு மாற்றம், தொழில் மாற்றம் போன்றவைகளால் இனிய பலன் கிட்டும்.

புரட்டாசி 10 ஆம் திகதி முதல் நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் சனி அங்கிருந்து கொண்டு 1,6,10 ஆகிய இடங்களைப் பார்த்து புனிதப்படுத்தப் போகிறார். இதன் விளைவாக விஸ்வரூபம் எடுத்த பிரச்சினைகள் வேகமாக முடிவடையும்.

அர்த்தாஷ்டமச் சனி ஆரோக்கியத்தில் பாதிப்புகளைக் கொடுக்கும் இடம் தான் என்பதால் 'வரும் முன் காப்போம்' என்ற திட்டத்தை நீங்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே நோய்க்கான அறிகுறிகள் தென்படும் பொழுது மருத்துவரை நாடினால் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல் அகலும்.

**நான்காமிடத்துச் சனி நன்மையைத் தருமா?**

சனி உங்கள் ராசிநாதனுக்கு நட்பு கிரகம். நண்பர்கள் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவுவது போல, நட்பு கிரகங்களும் கை கொடுத்து உதவும். பரபரப்பை குறைத்துக் கொண்டு பணிபுரிவது நல்லது. பெற்றோர்களையும், மற்றோர்களையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் பிரியங்களைக் கூட்டிக் கொள்ளலாம்.

சொத்துக்கள் வாங்குவதில் ஏமாற்றங்களைச் சந்திக்காதிருக்க பத்திரங்களைச் சரி பார்க்க வேண்டியது அவசியமாகும். வாகன மாற்றம் நல்லது. பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பொறுப்புகளும் வேலைப்பளுவும் கூடும்.

**பார்க்கும் சனியால் பணிகளில் மாற்றம்**

உங்கள் ராசியையும், ஆறு மற்றும் பத்தாமிடத்தைப் பார்க்கும் சனியால் பணிகளில் மாற்றங்கள் ஏற்படும். உடல்நிலை, எதிர்ப்பு, வியாதி, கடன், தொழில், செயல், புகழ், கீர்த்தி ஆகிய ஆதிபத்தயங்கள் தரும் இடங்களிலெல்லாம் மாபெரும் மாற்றங்களைக் காணப் போகிறீர்கள்.

உடல்நலம் ஒத்துழைக்கும் பொழுது உள்ளத்தில் மனக்கசப்பு தரும் சம்பவங்கள் ஒன்றிரண்டு உருவாகலாம். எனவே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வாக்கு கொடுக்கும் முன் யோசித்துச் செய்தால், கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். உத்தியோக மாற்றங்கள் உருவாவதைத் தவிர்க்க இயலாது. ஒரு சிலர் விருப்ப ஓய்வு கேட்டு விண்ணப்பிப்பார்.

தெசாபுத்தி வலுப் பெற்றவர்கள் விருப்ப ஓய்வில் சுய முயற்சியில் ஈடுபடலாம். அப்படி சுயதொழில் தொடங்குவதில் மனைவி, மக்கள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் அனைவர்



ஜாதகத்தையும் ஆராய்ந்து பார்த்து அதற்கேற்ற விதத்தில் தொழிலைத் தொடங்குவது நல்லது. செயல்பாடுகளில் அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயங்கள் அதிகரிக்கும். புதிய பங்குதாரர்கள் இணைந்து போற்றும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள நல்ல தருணமாகும்.

கூட்டுத் தொழில் செய்வோர் கணக்கு, வழக்குகளை சரி பார்த்து கொள்வது நல்லது. சனியை வணங்கிய பின் காரியத்தைத் தொடங்கினால், சுணங்கிய காரியங்கள் கூட சுறுசுறுப்பாய் நடைபெறும். 'கை தொழுத மாந்தர்க்குப் பை முழுதும் பணம் குவியும்.

யோக பலம் பெற்ற நட்சத்திரமும், புதன் கிழமையும் இணையும் நாளில் தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளைச் செய்தால் சங்கடங்கள் நீங்கிச் சந்தோஷங்கள் சேரும்.

**ராகு - கேது பெயர்ச்சி காலம்!**

27.10.2009 இல் ராசியில் ராகுவும், மிதுன ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். ஜென்மத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. சஞ்சலங்கள் மேலோங்கும். உற்றார், உறவினர் பகை அதிகரிக்கும். பணத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள சொத்துக்களை விற்க நேரிடும். சப்தம ராகு வாழ்க்கைத் துணையோடு மோதல் களை உருவாக்கலாம். எனவே, குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து சென்றால் தான் நிம்மதியைக் காண இயலும். பாம்பு கிரகங்களுக்குரிய பரிகாரங்களை முறையாகச் செய்தால் தேம்பும் நிலை மாறும். செல்வ நிலை உயரும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

கன்னி ராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது 15-12-2009 இல் கும்ப ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். அதன் பிறகு 2010 இல் மீன ராசியில் குரு சஞ்சரிப்பார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் இல்லம் வந்து சேரப் போகின்றன. சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். சுற்றத்தார் பாராட்ட சொந்தங்கள் வாழ்த்த, கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கை நிறையப் பொருள் சேரும். கும்ப குருவின் பார்வை உங்கள் ராசியிலேயே பதிவதால் உடல் நலம் சீராகும். மருத்துவச் செலவுகள் குறையும். பகையானவர்கள் நட்பாவார்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

மீன குருவின் பார்வை பலத்தால் குடும்பத்தில் ஒற்றுமை கூடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். கடுமையாக முயற்சித்தும் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறத் தொடங்கும். உத்தியோக மாற்றம், பதவி மாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம் போன்றவைகள் நீங்கள் கேட்காமலேயே வந்து சேரும். குரு வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் கொடுக்கல் – வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சனியின் வக்ர காலம் பொற்காலமாக மாற...**

14.01.2010 முதல் 31.05.2010 வரை மீண்டும் 27.01.2011 முதல் 13.06.2011 வரை சனி வக்ர இயக்கத்திலிருந்து செயல்படுகிறார். இதன் விளைவாக, தொழில் மாற்றங்கள் உருவாகலாம். கூட்டுத் தொழில் செய்வோர் மாற்றுத் தொழில் செய்ய முன்வருவர். ஆற்றல் மிக்கவர்கள் செய்யும் ஒத்துழைப்பை அடுத்தவர்கள் கெடுத்துவிடாமல் இருக்க அனைவரையும் அனுசரித்து செல்வது நல்லது. காக வாகனத்தானை செவிப்பதோடு உங்கள் ஜாதகப்படி அனுகூலம் தரும். தெய்வீகப் படங்களை இல்லத்து பூஜை அறையிலும் வைத்து வழிபாடு செய்யுங்கள். உடன் பிறப்புகளை அனுசரித்துச் சென்றால் தான் பாக பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

**ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்**

பிறருக்கு பணப் பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்தால் பகையும் உருவாகும். பணமும் திரும்பாது என்பதால் முன்யோசனையுடன் நடந்து கொள்வது நல்லது. விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் கால் நடைகள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். வக்ர காலத்தை பொற்காலமாக்குவது வழிபாடு மட்டும் தான்.

**சிறப்பு வழிபாடு**

*கன்னிச் சனியால் எண்ணிய காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!*

அர்த்தாஷ்டமச்சனியால் அகப்பட்டிருக்கும் நீங்கள் முத்தான வாழ்க்கையை மேற்கொள்ளவும், முன்னேற்றம் காணவும் புதன் கிழமை தோறும் விஷ்ணுவை வழிபட்டு வாருங்கள்.

"அர்த்தாஷ்ட மத்தில் நானும்  
அனுமனே உனை துதித்தேன்!  
வெற்றியை எனக்கு தந்தே  
வேந்தனாய் வாழ வைப்பாய்!"

என்று வேண்டிக் கொள்ளுங்கள். விருப்பங்கள் நிறைவேறும். (முற்றும்)

# வேதனையான ஓர் காலத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம்

## முன்னாள் பிரதம நீதியரசர் கவலை

வேதனையான ஓர் கால கட்டத்தில் தாம் வாழ்ந்து வருவதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டியில் தனியார் பாடசாலையொன்றின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் பல சரத்துக்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நாட்டில் சட்டம் ஒழுங்கு உடைத்தெறியப்பட்டுள்ளதாகவும் இது மிகவும் ஓர் வேதனையான நிலைமை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் அனைத்து சரத்துக்களையும் நேர்மையுடன் பாதுகாக்க வேண்டியது நாட்டின் சகலரதும் தலையாய கடமை.

ஒவ்வொரு அதிகாரியும், கிராம உத்தியோகத்தர், பொலிஸ் உத்தியோகத்தர் முதல் ஜனாதிபதி வரையில் அனைவரும் அரசியல் சாசனத்திற்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

நாட்டின் அரசியல் சாசனத்தை முழுமையாக பாதுகாப்பதாக கூறியே பிரதம நீதியரசரிடம் ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொள்வதாகத் தெரிவித்துள்ளார். (ச-5)

# தமது உயிர்களைத் தியாகஞ் செய்து பெற்றுத்தந்த வெற்றியை தாரைவார்க்கத் தயாரில்லை-ஜனாதிபதி

படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்து பெற்றுத் தந்த வெற்றியைத் தாரை வார்த்துக் கொடுப்பதற்கு அனைத்துலக சக்திகளுடன் இணைந்து சிலர் சதி முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த முயற்சிகளுக்கு தான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் அறிவித்துள்ளார்.

இந்த நாட்டின் சுதந்திரத்தைக் காட்டிக் கொடுப்பதற்கு முற்படக்கூடிய எந்தச் சக்திகளையும் தான் அனுமதிக்கப்போவதில்லை எனவும் கொழும்பில் அரச தலைவரின் அதிகாரப் பூர்வமான இல்லமான அலரிமாளிகையில் தென் மாகாண அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு பேசி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

படையினர் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள் எனத் தெரிவித்த அரச தலைவர் 26 ஆயிரம் பேரின் உயிர்த் தியாகத்தால் சிறிலங்காப் படையினருக்கு இந்த வெற்றி கிடைத்திருப்பதாகவும் இதனைத் தாரைவார்த்துக் கொடுப்பதற்கு தான் எந்தச் சந்தர்ப்பத்திலும் தயாராக இல்லை எனவும் குறிப்பிட்டார். (ஓ-5)

கடவுளிடம் கேட்க வேண்டியதைக் கேளுங்கள். ஆனால் அவர் கொடுப்பதைப் பெற்றுக் கொள்ளத் தயாராய் இருங்கள்.

– நார்மன் வின்செண்ட் பீல்

வலம்புரி

# சனி மாற்றத்தில் சரித்திரம் மாறும் போல் தெரிகிறது

இறைவன் எங்கே இருக்கின்றான்? அவன் எத்திசையை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கின்றான்? அவர் என்ன செய்கின்றான்? இந்த மூன்று சந்தேகங்களும் ஒரு மன்னனுக்கு ஏற்பட்டது.

அந்தக் காலத்து மன்னர்களுக்கு சந்தேகம் ஏற்படுவது வழக்கம். ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்ப்பதற்குத் தன் அரண்மனையில் ஆஸ்தான புலவரை அணுகினான். புலவரால் சந்தேகத்தைத் தீர்க்க முடியவில்லை.

மன்னனுக்குக் கோபம் வந்து விட்டது. ஒரு நாள் அவகாசம் கொடுக்கின்றான் மன்னன். வீடு சென்ற புலவன் கலக்கமுறுகின்றார். புலவரின் கலக்கத்தைக் கண்ட அவரின் ஏழு வயதுப் பேர்த்தி கலக்கத்தின் காரணத்தை வினவுகின்றாள்.

புலவர் தன் நிலையை எடுத்துக் கூறுகின்றார். சிறுமி சிரிக்கின்றாள்– இதற்கேன் கலக்கம். மன்னரின் கேள்விக்கு நானே பதில் அளிக்கின்றேன் என்று கூறிவிட்டு அரண்மனைக் குப் போகின்றாள்.

மன்னா! தங்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்திற்கு விடையளிக்க வந்துள்ளேன் என்கிறார் சிறுமி. மன்னன் ஆச்சரியமடைகின்றான். இருந்தும் தனது முதலாவது சந்தேகத்தை எழுப்புகின்றான். கடவுள் எங்கேயிருக்கின்றார்?

மன்னா! ஒரு பாத்திரத்தில் பசுப்பால் கொண்டு வர உத்தரவிடுங்கள். பாத்திரத்தில் பால் கொண்டு வரப்படுகின்றது. அப்போது சிறுமி மன்னனிடம் கேட்கின்றாள்; இந்தப் பாலில் நெய் எங்கேயிருக்கின்றது? அதுபோலத்தான் இறைவனும் இருக்கின்றான்.

ஆச்சரியமடைந்த மன்னன் கடவுள் எத்திசையை நோக்கிப் பார்க்கின்றான் என்ற கேள்வியைக் கேட்க,

அரண்மனையில் தீபம் ஏற்றுமாறு சிறுமி உத்தரவிடுகின்றாள். வேந்தே! இத் தீபம் எத்திசையை நோக்கி ஒளியைப் பரப்புகின்றது. திசையின்றி ஒளி பரப்பும் இந்தத் தீப ஒளி போன்றுதான் இறைவனும் எங்கும் பார்த்த வண்ணம் உள்ளான் எனப் பதிலளிக்கின்றாள்.

சிறுமியின் அற்புதப் பதிலைக் கேட்ட மன்னன் குழந்தாய்! கடவுள் என்ன செய்கின்றார்? அதிரடியாக சிறுமி பேசுகின்றாள். மன்னா! இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க உன் சிம்மாசனத்தில் நான் அமர வேண்டும். அதற்காக நீ ஆசனம் விட்டு இறங்க வேண்டும்.

சிறுமியின் கட்டளையை மன்னன் ஏற்க, அவள் சிம்மாசனத்தில் அமர்கிறாள். சேவகர்களே! மன்னனைக் கைது செய்து சிறையில் அடையுங்கள் என அந்தச் சிறுமி உத்தரவிடுகின்றாள்.

மன்னன் பதறுகின்றான். மன்னா! கலங்காதே! இதைத் தான் இறைவன் செய்து கொண்டிருக்கின்றான் என்று அமைதியாகப் பதிலளிக்கின்றாள் சிறுமி.

அது சரி, இந்தக் கதை எதற்கு என்று நீங்கள் மௌனமாய்க் கேட்பது என் செவிகளைத் துளைக்கின்றது.

அட! சனி மாற்றம் அதனால இந்தக் கதை கால அசைவில் பொருந்தும் அவ்வளவுதான்.

# சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலகம் மீண்டும் கொழும்பில்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலகம் கொழும்பில் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரியான நீக்லஸ் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இன்னும் இரண்டு வாரங்களில் அலுவலகம் திறக்கப்படும் எனவும் அதற்கான அதிகாரிகள் குழு ஒன்றும் விரைவில் கொழும்புக்கு வரவுள்ளதாகவும் அவர் கூறினார்.

2.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு வழங்கியுள்ள நிலையில் அந்த நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை அவதானிப்பதற்கு நாணய நிதியத்தின் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தது.

அதனடிப்படையிலேயே கொழும்பில் அலுவலகம் திறக்கப்படவுள்ளதாக நீக்லஸ் பெர்ணான்டோ கூறினார்.

இதேவேளை கொழும்பில் அலுவலகம் ஒன்று இன்னும் இரண்டு வாரங்களில் திறக்கப்படும் என்பதை சர்வதேச நாணய நிதியத்தின் சார்பாக கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அரசாங்கத்திற்கு நிதியுதவிகளை வழங்குவதற்கு எந்தவிதமான இரகசிய உடன்படிக்கைகளும் நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை என்றும் அந்த இராஜதந்திரி விளக்கமளித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவி ஏற்று விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதும் சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பு அலுவலகம் மூடப்பட்டு அதிகாரிகளும் வெளியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# யாழில் நவீன சிறுவர் முன்மாதிரி பாடசாலை அமைக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் முன்பள்ளி நவீன மாதிரிப் பாடசாலை ஒன்றை யாழ்.நகரில் அமைப்பதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளும்பொருட்டு சிறுவர் அபிவிருத்தி, மகளிர் மேம்பாட்டு அமைச்சு அதிகாரிகளும் ஹேமாஸ் நிறுவன நிறுவனத்தின் பிரதிநிதிகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று முற்பகல் அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பின்போது, சிறுவர் முன்பள்ளி நவீன மாதிரிப் பாடசாலையை நிர்மாணிப்பதற்குத் தேவையான இடஒதுக்கீடு உட்பட பல்வேறு வசதிகளை வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்ட சமயம்,

தேவையான உதவிகளை வழங்குவதற்கு யாழ்.மாநகர சபை தயார்ாகவுள்ளதாக மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார். (ச–5)

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் சுயதொழில் ஊக்குவிப்புத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி அனுசரணையுடன் ‘சொண்ட்’sond) அரசு சார்பற்ற நிறுவனத்தினால் சுய தொழிலினை ஊக்குவிப்பதற்கான செயற்திட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயற்திட்டத்திற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜே/142 சண்டிலிப்பாய் வடக்கு ஜே/146 பண்டத்தரிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள வறுமைக் கோட்டிற்குட்பட்ட 11 சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களினுடைய பெற்றோர்களின் வருமான அதிகரிப்பினை மேம்படுத்தும் நோக்கில் மாடு மற்றும் கோழி வளர்ப்பு சிறுவியாபாரம்என்பனவற்றுக்குரிய உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்விற்கு சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் நிறுவன பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளதாக‘சொண்ட்’ நிறுவன திட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஓ–30)

# கோப்பாய் இலங்கை வங்கிக்கிளை கணனிமயப்படுத்தப்பட மாட்டாதா?

## அப்பகுதி மக்கள் ஏக்கம்

(கோப்பாய்)

கோப்பாயிலுள்ள இலங்கை வங்கியின் விரிவாக்கற் கிளை கணனி மயப்படுத்தப்படாத நிலையில் பணியாற்றுவதனால் வாடிக்கையாளர் பெரும் சிரமங்களையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

வங்கிச் சேமிப்பு, பணவைப்பு, மீளெடுப்பு முதலிய நடவடிக்கைகளுக்காச் செல்லும் வாடிக்கையாளர் ஒருவர் தனது புத்தகங்களை ஒப்படைத்து விட்டுப் பின் வேறொரு நாள் புத்தகம் பெறச் செல்ல வேண்டியிருப்பதாகவும் இதனால் ஒரு சந்தர்ப்பத்தில் நிறைவேற்ற வேண்டிய வங்கிக் கருமத்துக்காக இரண்டு தடவைகள் அலைய வேண்டியதாகவும் கூறப்படுகின்றது.

உரிய அலுவலர்கள் கவனமெடுத்து இவ்வங்கியைக் கணனிமயப்படுத்தப்பட்ட சேவை நிலையமாக மாற்ற வேண்டும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ஓ)

# ப.நோ.கூ. சங்க கிளை அறிவித்தலின்றி மூடப்பட்டுள்ளதால் மக்கள் சிரமம்

(காரைநகர்)

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வாரிவளவு கிளை (இலக்கம் 12) மூடப்பட்டுள்ளதால் சுமார் நூற்று ஐம்பத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது,

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வாரிவளவு பிரதேசத்தில் உள்ள 12 ஆம் இலக்க கிளை கடந்த ஒரு வாரமாக மூடப்பட்டுள்ளது.

இக்கிளை மூடுவது சம்பந்தமாக எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்படாமையினால் தற்போது சமூர்த்தி மற்றும் உலக உணவுத் திட்ட நிவாரணம் பெறும் பயனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக ஏனைய சங்கங்களில் மேற்படி நிவாரணம் வழங்கப்பட்டு வரும் வேளையில் இக்கிளை மூடப்பட்டுள்ளதால் குறித்த பயனாளிகள் நிவாரணப் பொருட்களை எங்கு பெறுவது என அலைந்து திரிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளை மூடப்பட்டது தொடர்பாக கிராம சேவையாளர்களிடம் விசாரித்த போதும் தமக்கு கிளை மூடுவது தொடர்பாக எவ்வித அறிவுறுத்தலும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளதாக பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ஓ–246)

# காரைநகரில் திருடர்கள் அட்டகாசம் பொதுமக்கள் பீதியில்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். கடந்த வாரத்தில் மட்டும் ஐந்து இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

காரைநகர் களபூமியில் பூசகர் ஒருவரின் வீட்டில் கடந்த வாரம் இரவு வேளையில் திருடர்கள் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட போது பூசகரைத் தாக்கியதில் பூசகர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர் பொன்னம்பலம் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனமொன்றில் கூரை பிரித்து இறங்கிய திருடர்கள் கிற் காட்டுகள் உட்பட பெறுமதியான பொருட்கள் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளது.

அதேவேளை பெரிய மணல் பகுதி வீடு ஒன்றில் இரவு வேளை புகுந்த திருடர்கள் இரண்டு மிதிவண்டிகள் உட்பட பொருட்கள் சிலவற்றினைத் திருடியுள்ளனர்.

காரைநகர் மத்தி பிரதேசத்தில் மேலும் இரு வர்த்தக நிலையங்களில் இரவு வேளை திருட முயற்சி செய்த போது உரிமையாளர்கள் விழித்துக் கொண்டதினால் திருடர்கள் முயற்சியைக் கைவிட்டனர். காரைநகர் பிரதேச பிரபல பாடசாலை ஒன்றில் திருடர்கள் கூரை பிரித்து இறங்கி உள்ள போதும் பொருட்கள் எதுவும் திருட்டுப் போனதாக தெரிவிக்கப்படவில்லை.

மேற்குறித்த திருட்டுச் சம்பவங்கள் கடந்த ஒரு வாரத்துக்குள்ளேயே நடந்துள்ளதாக பொதுமக்கள் இரவு வேளைகளை அச்சத்துடன் கழித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–246)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## நம்பிக்கையும் வலிமையும்



மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டுமே. நீ உனது சொந்த உறுதியான முடிபில் பிடிப்புடன் இரு. பிறகு நிச்சயமாக மற்றவை நடந்தேறி உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கம்.

இவனை நம்பு அல்லது அவனை நம்பு என்று மற்றவர் சொல்கிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன். முதலில் உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை. அதுதான் வழி. உன்னிடத்தில் நீ நம்பிக்கை வை எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருக்கின்றன.

அதை உணர்ந்து நீ அந்த ஆற்றலை வெளிப்படுத்து. நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் விடயத்தைப் பொருட்படுத்தாதிருந்தால் பாம்பின் விஷம் கூடச் சத்தியற்றதாகிவிடும்.

# மாற்று வலுவுள்ளோர் பற்றியும் சிந்திப்போம்



மனித வாழ்க்கை என்பது போராட்டம் நிறைந்தது. ஆனால் போராட்டமே வாழ்க்கை என்றால் அம் மனிதன் படும்வேதனைகள் சொல்லில் அடங்காதது. போரினாலும் விபத்துக்களினாலும் நோய்களினாலும் பிறப்புக் குறைபாடுகளினாலும் அங்கங்களில் செயலிழந்து அல்லது அங்கங்களை இழந்து எம் மத்தியில் வாழும் மனிதர்களின் வாழ்க்கையும் போராட்டம் நிறைந்ததாகவே உள்ளது.

இந்த மாற்றுவலுவுள்ளோரின் மாற்று வலுக்களை இனங்கண்டு அவற்றை மேம்படுத்தி அவர்களையும் சமுதாயத்தின் அங்கத்தவர்களாக சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக சமூகத்தில் தங்கி வாழாதவர்களாக தம் சுய முயற்சியால் அனைத்துச் சவால்களையும் எதிர்கொள்ளக்கூடியவர்களாக மாற்றுவது எம் எல்லோர் மத்தியிலும் விடப்பட்டுள்ள ஒரு சவாலாகக் காணப்படுகின்றது.



போக்குவரத்து வசதியீனங்கள் இவர்களின் கல்வி வாய்ப்புக்களையும் தொழில் வாய்ப்புக்களையும் கடுமையாக மட்டுப்படுத்துகின்றது.

மாற்று வலுவுள்ளோரில் எத்தனை சதவீதத்தினர் பொது போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர் என சிந்தியுங்கள். சக்கரநாற்காலிகள், மூன்று சில்லு சைக்கிள்கள் போன்றன இவர்களின் நடமாட்டத்தை ஓரளவிற்கேனும் முன்னேற்ற உதவினாலும் பாடசாலைகள், வைத்தியசாலைகள், பல்கலைக்கழகம், அலுவலகம், வணக்கஸ்தலங்கள், வங்கிகள் போன்றவற்றினுள் இச் சக்கர நாற்காலிகள், மூன்று சில்லு சைக்கிள்கள் நுழைய முடியாதவாறு அமைக்கப்பட்டுள்ளன. இத்தடைகள் தமது சொந்தக் காலில் நிற்க முயலும் மாற்று வலுவுள்ளோர்களை தொடர்ந்து தங்கி வாழ்பவர்களாக மாற்றியமைக்கின்றன.

சம உரிமை, சம வாய்ப்பு போன்றவை பற்றி நாம் எல்லோரும் பேசினாலும் உண்மையில் மாற்று வலுவுள்ளோர் அவற்றை அனுபவிக்கிறார்களா என நாம் சிந்தித்து பார்க்கவேண்டிய தருணம் இதுவே.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு, உரிமைகள் எம் நாட்டில் வழங்கப்படுகிறதா? வளர்ச்சியடைந்த நாடுகளில் மாற்றுவலுவுள்ளோரும் பயன்படுத்தவென போக்குவரத்துச் சாதனங்கள், கட்டட வசதிகள், அலுவலகங்கள் போன்ற விசேட அமைப்புக்கள் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

> வர்த்தகமானி இல. 1465/15. 17 ஆம் திகதி ஒக்டோபர் 2006 இன் பிரகாரம் சகல புதிய பொதுக்கட்டடங்களும் மாற்று வலுவுள்ளோரும் பயன்படுத்தக் கூடியதாக அமைக்கப்படல் வேண்டும். இல்லாவிடின், அக் கட்டடங்களுக்கான அமைவுச் சான்றிதழ் உரிய உள்ளூராட்சி சபையினால் வழங்கப்படலாகாது. ஒழுங்குவிதி 2(1) இன் பிரகாரம் தற்போதுள்ள சகல பொதுக் கட்டடங்களும் 2009 ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு முன்னதாக மாற்று வலுவுள்ளோர் பயனடையக்கூடியவாறு அமைக்கப்பட வேண்டும்.

எமது நாட்டிலும் மேலைத்தேய நாடுகளில் உள்ள வசதிகளுக்கு ஒப்பான வசதிகள் மாற்று வலுவுள்ளோருக்கு வழங்கப்படல் வேண்டும் என சட்டங்கள் இருந்தபோதும் எம்மில் எத்தனை பேர் அவற்றைப்பற்றி சிந்திக்கிறார்கள். புதிதாக அமைக்கப்படும் அரச கட்டடங்களிலாவது மாற்று வலுவுள்ளோரும் நுழைந்து தம் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றோமா? மேற்குறித்த சட்டங்களிலிருந்து மீறும் திணைக்களங்களின் மீது ஏதாவது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா?

மாற்று வலுவுள்ளோர் மற்றவர்களைப் போல வசதிகளையும் வாய்ப்புகளையும் அனுபவியாவிட்டாலும் அவர்களின் அடிப்படை தேவைகளான கல்வி, சுகாதாரம், போக்குவரத்துப் போன்ற வசதிகளையாவது சம உரிமையுடன் அனுபவிப்பதற்குரிய ஏற்ற ஒழுங்குகளை செய்யவேண்டியது எம் எல்லோரினதும் பொறுப்பாகும்.

நாம் சட்டத்தின்படி ஒழுகாவிட்டாலும் எம் மத்தியில் வாழும் இவர்களை எம் சகோதரராகவோ உறவினவராகவோ எண்ணி அல்லது நாளை இந்நிலை எமக்கு ஏற்படக்கூடுமென எண்ணி செயற்படுவதன் மூலம் இவர்கள் தொடர்ந்தும் தங்கி வாழ்பவராக இல்லாது இந்த சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட தடைகளற்ற சூழலில் சுயகௌரவத்துடன் வாழமுடியும். சமுதாய அங்கத்தவர்கள் என்ற ரீதியில் ஒவ்வொருவருக்கும் இது சம்பந்தமான பொறுப்புக்கள் உள்ளன.

மாற்றுவலுவுள்ளோருக்கு அவர்களின் அங்கக் குறைபாடுகள், அங்கச் செயலிழப்புக்கள் ஒருவிதத்தில் அவர்கள் முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதுடன் இயலக்கூடிய சமுதாயம் தனது வசதிக்காகவும் தேவைகளுக்காகவும் அமைந்த கட்டடங்கள், சேவை நிலையங்கள் போன்றனவும் இரண்டாம் நிலை தடைகளாக அமைகின்றன. மிகுந்த சிரமத்துடன் முதலாம் நிலை தடைகளைத் தாண்டிவரும் மாற்று வலுவுற்றோர் இவ் இரண்டாம் நிலை தடைகளால் மனமுடைந்து போகின்றனர்.

உதாரணமாக மூன்றுசில்லு சைக்கிள் அல்லது ஊன்றுகோல் பாவித்து வீட்டில் முடங்கியிராது சொந்தக் காலில் நிற்கும் எண்ணத்தோடு வெளிவரும் ஒரு மாற்று வலுவுள்ளவர் தனது சொந்தத் தேவைக்காக ஓர் வங்கிக்கு செல்ல வேண்டி நேரிடின் வாசலில் அமைந்துள்ள படிக்கற்கள் அவர்களுக்கு தடைக்கற்களாக தென்படுகின்றன.

வங்கியின் வாசலில் நின்றபடியே இன்னொருவரை உதவிக்கு அழைத்து தேவைகளை நிறைவேற்றவேண்டியுள்ளது.

எமது பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மாற்றுவலுவுள்ளோரை உள்வாங்கும் நோக்கோடு அமைக்கப்படவில்லை.

இவர்களுக்கு சம உரிமை வழங்கப்படுமிடத்து அவர்களும் பல்கலைக்கழகத்தினுள் நுழைவார்கள் என எதிர்பார்க்க வேண்டும்.

இன்று எமக்குக் கிடைத்துள்ள செயற்படு திறன், நடமாடும் திறன் (Ability and mobility) எம்மிடமிருந்து எவ்வேளைகளிலும் பறிக்கப்படலாம்.

**டாக்டர் க.நந்தகுமார்**
உபதலைவர்,
வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்,
யாழ்ப்பாணம்

"குருத்தோலையும் ஒருநாள் காவோலையாகும்" என்பது முதுமொழி. முதுமை என்பது விரும்பியோ, விரும்பாமலோ ஒவ்வொருவருக்கும் ஏற்படும் நிலையாகும். எனவே எம் சொந்த வீடுகளினாலும் வியாபார ஸ்தலங்களினாலும் அலுவலகங்களினாலும் பொது நிறுவனங்களினாலும் இன்று அமைக்கும் இக் கட்டடங்கள் எதிர்காலத்தில் எம்மாலேயே பயன்படுத்த முடியாத நிலை ஏற்படலாம். எனவே இன்றே சிந்தித்து நன்றே செய்வோம். அதை இன்றே செய்வோம்.

## பயங்கரவாதம் அழிக்கப்பட்டுள்ள போதிலும் கடற்படையினரின் கடமைகள் முடியவில்லை

### கடற்படைத் தளபதி

விடுதலைப்புலிகள் இயக்கம் இல்லாதொழிக்கப்பட்டுள்ள நிலையிலும் கடற்படையினரின் கடமைகள் முடிவடையவில்லை என கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்பகாலங்களில் சிறந்த கடற்படை கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருந்தால் பாரிய அழிவுகளில் இருந்து நாட்டை மீட்டிருக்கலாம் என சுட்டிக்காட்டியுள்ள அவர்

தற்போது பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ள போதிலும் கடற்படையினரின் சேவைகளை சுலபமாக கருதமுடியாது என அவர் தெரிவித்துள்ளார். கடல்வழியாக நாட்டிற்குள் பிரவேசித்தல் மற்றும் வெளியேறுவதைத்தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது கடற்படையினரின் கடமையா கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்காத வகையில் கடற்படையினர் தொடர்ச்சியாக கடமைகளை முன்னெடுப்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way**
**French Classes**

**Alliance Frenciaise de Jaffna** இன் ஊடாக சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு விரிவுரையாளர்கள் மூலம் கற்பிக்கப்படுகின்றன.

மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், ஆசிரியர்கள் மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

*வகுப்புக்கள் சனி, ஞாயிறுகளில்*
*புதிய பிரிவு மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.
(3559)

## தெரிவு செய்யப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு மட்டும் விடுதலை வழங்குவது ஏற்றுக்கொள்ளமுடியாது

### மனோகணேசன் எம்.பி

(கொழும்பு)

தெரிவு செய்யப்பட்ட சில விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு மட்டும் பிணை வழங்கும் நடைமுறைகளை ஏற்றுக்கொள்ள முடியாதென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளதாக கொழும்பில் வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சிரேஷ்ட விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படுவதனை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், தயா மாஸ்டர் ,ஜோர்ஜ் மாஸ்டர் போன்ற சிரேஷ்ட விடுதலைப் புலி உறுப்பினர் களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ள அதேவேளை சாதாரண விடுதலைப்புலி சந்தேக நபர்கள் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னால் போராளிகளுக்கு அளிக்கப்படவுள்ள மறுவாழ்வு திட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் என்றும் ஆதரவளிக்கும்.

16 வருடங் களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்களுக்கு இந்த திட்டத்தின் மூலம் நன்மை அளிக்கப்பட வேண்டும் .

மீள் குடியேற்றம் முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு அளித்தல் ,காணாமல் போதல்கள் மற்றும் கைதுகள் என்பனவே தமிழ் மக்கள் நாட்டில் எதிர்நோக்கி வரும் பிரதான மனித உரிமை மீறல் பிரச்சினைகள் என்றார். (ஓ-6)

# தேசிய ஹொக்கிப் போட்டியில் விளையாட யாழ். அணி இன்று மாத்தளை செல்கின்றது



இலங்கைக் ஹொக்கிச் சம்மேளனத்தி னால் நடத்தப்படும் 53ஆவது தேசிய ஹொக் கிச் சுற்றுப் போட்டி-2009 நாளை செப்டெம் பர் 24 தொடக்கம் 27ஆம் திகதி வரை மாத்த ளையில் நடைபெறவுள்ளது. இவ் அணி வீரர் கள் இன்று புதன்கிழமை மாத்தளை புறப்படு கின்றனர். இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் யாழ்.மாவட்ட அணி வீரர்களின் பெயர்கள் வருமாறு:-

நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக) ஆர்.சஜீவன், பி.ஜெயராஜ், ரி.லக்ஸ்மன், பி.நேசரூபன், எஸ்.நிஷாந்தன், என். ஜெனார்த்தனன்,என்.வசீகரன், எஸ்.சுகிர்தன், எஸ்.சுரேந்தர்.

இருப்பவர்கள்(இடமிருந்து வலமாக)

ஜீ.டி.மதியழகன் (பயிற்றுநர்), எம்.ஜே.இத யகுமார், எஸ்.றஜீவன், ஆர்.குகன் (அணித் தலைவர்), ஆர்.இராஜேஸ்வரன் (அணி உப தலைவர்), ஆர்.கே.சாம்சன், ஆர்.பாலு, என்.துஷ்யந்தன் (தலைவர்-யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கம்).

## யாழ்.வருவதற்...

வரிசையில் காத்து நிற்கும் நிலையில் இந்த இடம் மாற்றம் பல சிரமங்க ளைப் பயணிகளுக்கு உருவாக்கியிருப்பதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து இரவு தபால் ரயிலில் வருகின்ற பயணிகள் வவுனியா ரயில் நிலையத்தில் இறங்கி காலையிலேயே ரம்யா ஹவுஸ் இராணுவ சிவில் அலுவலகத்திற்கு முன்னால் சென்று டோக்கன் எடுத்து பாஸ் பெற்று பிரயாணத்தை மேற்கொண்டு வந்தார்கள்.

தற்போது இந்த அலுவலகம் ஈரப்பெரிய குளத்திற்கு மாற்றப்பட்டிருப்பதனால் வவுனியா நகரில் இருந்து மூட்டை முடிச்சுக்களுடன் அங்கு செல்வதற்கு ஓட்டோவுக்கான கட்டணமாக 350 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் காலையில் இருந்து பிற்பகல் அல்லது மாலையில் யாழ்ப்பாணத்தை நோக்கி பஸ் வண்டிகள் புறப்படும் வரையில் இந்த அலுவலகத்திற்கு முன்னால் காத்து நிற்க நேரிட்டுள்ளதனால் அங்கு கழிப்பறை வசதிகளோ அல்லது உரிய சிற்றுண்டிச் சாலைகளோ இல்லாமல் அவதியுற நேர்ந்திருப்பதாகவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றி வருகின்ற பஸ் வண்டிகள் பயணிகளைப் பஸ் நிலையத்தில் இறக்கி விடுவதனால் அவர்கள் வசதியாக ரயில் நிலையத்திற்குச் செல்வதற்கும் பஸ் வண்டிகளில் ஏறி திருகோணமலைக்கோ அல்லது மட்டக்களப்புக்கோ செல்வதற்கு வசதியாக இருப்பதாகவும் ஆனால் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பயணிகள் பெரும் அலைச்சலுக்கும் சிரமங்களுக்கும் உள்ளாக நேரிட்டிருப்பதாகவும் பயணிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## அரசாங்கத்துக்கு எதிரான கூட்டணிக்குள்...

இன்னும் முழுமையடையாத காரணத்தாலும் தென்மாகாண சபைத் தேர் தல் முடிபுகளுக்காகக் கட்சிகள் காத்திருப்ப தாலும் இந் நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதற்கிடையே இந்த நடவடிக்கைகளின் புதிய முன்னேற்றமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் எதிரணிக் கூட்டணிக்குள் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இது விடயம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனுடன் தனியாகப் பேச்சுக்களைத் தொடங்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தப் புதிய முன்னேற்றத்துக்கு மத்தியில் எதிரணிக் கூட்டமைப்பைத் தொடங்குவது குறித்து இதுவரை 9 சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களின் போது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியை முறையை ஒழித்து அதற்குப் பதிலாக நாடாளுமன்றத்திற்குப் பதிலளிக்கும் வகையிலான நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவி முறையை உருவாக்குவது குறித்தே முதன்மையாக விவாதிக்கப்பட்டதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிரணிக் கூட்டமைப்பு எதிர்நோக்கிய பிரச்சினைகளில் 90 வீதம் ஏற்கனவே தீர்க்கப்பட்டு விட்டன. எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது ஒரு பிரச்சினையே இல்லை என்று கூறினார் திஸ்ஸ அத்தநாயக்க.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது, பொருளாதாரத்தைப் பலப்படுத்துவது, ஜனநாயகம் மற்றும் ஊடக சுதந்திரத்தை பேணுவது போன்ற விடயங்கள் அடுத்த வாரங்களில் நடைபெறும் கலந்துரையாடல்களில் ஆராயப்படும் எனவும் அவர் கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து பொது வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பில் ஜே.வி.பியுடனும் பேச்சுக்கள் நடத்தப்படும் என அத்தநாயக்க தெரிவித்தார்.

ஆனால் ஐ.தே.கவுடன் எப்போதும் ஜே.வி.பி. ஒப்பந்தத்துக்குச் செல்லாது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறினார்.

எதிரணிக் கூட்டணியில் இணைந்து கொள்ளுமாறு ஐ.தே.க. விடுத்த அழைப்புக் குறித்து ஜே.வி.பியிடம் கேட்டதற்கே அவர் இப்படிப் பதிலளித்தார்.

எப்படியிருந்தாலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு இணங்கும், அரசியல் கட்சி அல்லாத வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி ஆக்குவதற்கு ஐ.தே.க. இணங்குமானால் அதற்கு ஆதரவளிப்பது குறித்து பரிசீலிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## பருவமழை தொடங்கப் போகின்றது...

பொதுமக்கள் மத்தியிலிருந்து விடுதலைப் புலிகளை வடிகட்டும் நடவடிக்கைகளையும் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை விரைவுப்படுத்தினால் மக்களை முகாம்களில் தடுத்து வைக்க வேண்டி இருக்காதென நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடகவியலாளர்களிடம் பேசும்போது தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்கத் துணை அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த மக்கள் 3 மாதங்களுக்கு மேல் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள் அவர்களின் நிலை குறித்து இப்போது நாம் மிகவும் கவலையடைந்துள்ளோம்.

ஏன் எனில் செப்டெம்பர் மாத இறுதியில் அங்கு பருவ மழை தொடங்கப் போகிறது. ஏற்கனவே அதிக சன நெருக்கடியால் முகாம்களில் பெரும்பிரச்சினைகள் காணப்படுகின்றன.

ஏற்கனவே பல தடவைகள் இந்த விடயம் குறித்து இலங்கை அரசுக்கு அமெரிக்க அழுத்தங்களை கொடுத்துள்ளதுடன் முகாம் மக்களை விடுவிக்கும் மாறும் பல தடவைகள் கோரியுள்ளது.

இந்த விடயத்தில் முன்னோக்கி நகரும் மாற அரசைக் கோருவதில் அனைத்துலக சமூகத்திற்கு இடையில் பெருமளவு கருத்து ஒற்றுமை காணப்படுவதாகவும் பிளேக் சுட்டிக்காட்டினார்.

இதேசமயம் இனங்களுக்கிடையிலான கருத்து இணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் கூட இது மிக முக்கியமான நடவடிக்கை என்பதையும் அவர் குறிப்பிட்டுக்காட்டினார்.

நான் நினைக்கிறேன் நீங்கள் தொடர்ந்தும் இத்தகைய சூழலுக்குள் இடம் பெயர்ந்தவர்களை நீண்டகாலத்திற்கு வைத்திருப்பது மீண்டும் பிரச்சினைகளை உருவாக்கும் சூழலுக்கு இட்டுச் செல்லும். எனவே அவர்களை விடுவிப்பது மிக முக்கியம் என்றார் பிளேக்.

வடபகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப் படவேண்டி இருப்பதன் காரணத்தால் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரையும் உடனே மீளக்குடியமர்த்திவிட முடியாது என்ற விடயத்தையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

முன்னாள் போராளிகளை அடையாளப் படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படத் தான் வேண்டும். மக்கள் முகாம்களுக்கு வந்த நாள்முதலாக அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டினார்.

எங்கள் கருத்து அந்த நடவடிக்கைகளை விரைவு படுத்தினால் மக்களை முகாம்களில் தங்க வைக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதுதான் எனவும் பிளேக் தெளிவாக குறிப்பிட்டார். (ச-5,14)

## சிறுவர் தின போட்டிகளை 27ஆம் திகதிக்கு முன் நிறைவு செய்யப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாவட்டமட்டப்போட்டிகள் ஒக்டோபர் முதலாம் திகதி நடைபெற இருப்பதால் சிறுவர் நாடகம் மற்றும் ஆக்கத்திறன் போட்டிகளை பாடசாலை மட்ட, கோட்டமட்ட, வலய மட்டங்களில் எதிர் வரும் 27ஆம் திகதிக்கு முன்னதாக நடத்தி முடிக்கு மாறு யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் அறிவித்துள்ளார். உலக சிறுவர் தினத்தின் மாவட்ட நிகழ்வு கள் யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)


பதவி வெற்றிடம்

MCP, MCTS, MCSA, MCSE

மேற்படி கற்கைநெறிகளை கற்பிக்கக் கூடிய ஆற்றலுடையவர்கள் உடனடியாகத் தேவை

சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் தரவும்

காலம் :- 25-09-2009 9:30-11:00

NORTH LANKA IIT #113, Laxan Plaza, Navalar Rd.,Jaffna.

(C-3559)

# யாழ்ப்பாண பல்துறை சார்ந்தவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தகவல்

யாழ்.மாநகர சபை முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்கும் வைபவத்தில் யாழ்ப்பாணத்தின் பல்துறை சார்ந்த வர்களையும் ஜனாதிபதியுடன் சந்திக்க வைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் ஈ.பி.டி.பி சார்பில் தெரிவான உறுப்பினர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அடுத்த மாத முற்பகுதியில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வின்போது யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவாளர்கள் ,சட்டத்தரணிகள்,பல்கலைக் கழக, தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பல்துறை சார்ந்தவர்களையும் அழைத்துச் சென்று ஜனாதிபதியை சந்திக்க வைக்க உள்ளதாகவும் சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

இதன் மூலம் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரச்சினைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேரடியாக எடுத்துக்கூறுவதுடன் அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க முடியுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (ச-5)

# இலங்கையில் முதலீடு செய்ய இந்திய நிறுவனங்கள் ஆர்வம்

(கொழும்பு)

இலங்கையில் முதலீடு செய்வதற்கு இந்திய நிறுவனங்கள் பல ஆர்வம் காட்டி வருகின்றன.சில நிறுவனங்கள் ஏற்கனவே தமக்கான இடங்களை அடையாளப்படுத்தி தமது திட்டங்களுக்கான அனுமதியையும் அரசிடம் இருந்து பெற்றுள்ளன.

லார்சன் அன்ட் டோப்ரோ நிறுவனம் 50 மில்லியன் டொலர் செலவில் வர்த்தகவளாகம் ஒன்றை இங்கு அமைக்க உள்ளது என முதலீட்டுச் சபை இயக்குநர் சி.இக்னேசியஸ் தெரிவித்தார்.

இந்திய பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் ஏற்கனவே இலங்கையில் பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன.கொழும்பில் பல அடுக்குமாடிக் குடியிருப்புக்களும் அலுவலகத் தொகுதிகளும் இலங்கை மின்சார சபைக்கான மின்பரிமாற்ற நிலையங்களும் இந்த நிறுவனங்களால் அமைக்கப்பட்டு வருகின்றன.

கொழும்புக்கு வெளியே புறநகர்ப் பகுதிகளில் மக்கள் குடியிருப்புத் தொகுதிகளை அமைப்பதிலும் இந்திய நிறுவனங்கள் கவனம் செலுத்தி வருகின்றன. பெங்களூரைச் சேர்ந்த புரவங்கரா என்ற கட்டுமான நிறுவனம் புறநகர்ப் பகுதியில் 25 ஏக்கர் நிலப் பகுதியில் தனி வீடுகளைக் கொண்ட குடியிருப்புத் தொகுதி ஒன்றை அமைத்து வருவதாக இக்னேசியஸ் கூறினார்.

இரண்டு வருடத்திற்கு முன்பே அந்த நிலத்தை புரவங்கரா நிறுவனம் பெற்றுக் கொண்டபோதும் பணிகளை இப்போதே தொடங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் எயார்டெல் தொலைபேசி நிறுவனமும் ஏற்கனவே தனது சேவையை இலங்கையில் தொடங்கியுள்ளது.இந்த திட்டத்திற்கென 2008ஆம் ஆண்டு 100 மில்லியன் டொலரை எயார்டெல் நிறுவனம் முதலீடு செய்துள்ளது. அத்துடன் 2012 வரைக்கும் 200 மில்லியன் டொலரை முதலீடு செய்யப் போவதாகவும் அது அறிவித்துள்ளது. (ச-5)

# வவு.வில் பெண் தற்கொலைதாரி சந்தேகத்தில் பொலிஸாரால் கைது

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்து வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட தேடுதலின்போது தற்கொலைத்தாரி எனச் சந்தேகிக்கப்படும் இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் போது இந்தப் பெண் வழங்கிய தகவலை அடுத்து தற்கொலைத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் 3 அங்கிகளும் வெடிபொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காட்டுப் பகுதி ஒன்றில் இவை ஒழித்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்தின் பேரில் இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டபோது, அவருடன் இருந்ததாகத் தெரிவிக்கப்படும் மற்றொரு இளம் பெண் சைனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களாக இருக்கலாம் எனப் பொலிஸ் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ச-5)

## கடல்...

முதல் இரவு 7 மணி வரை கடற்கரைக்குச் சென்று வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. யாழ்.அரச அதிபர் மற்றும் பாதுகாப் புத் தரப்பினர் ஆகியோருடன் ஆலய அறங்காலர் சபையினர் தொடர்பு கொண்டதையடுத்து இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து கடல் தீர்த்தத்திற்கு சுமார் 100 பேருக்கே அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-ஓ)

## கல்வி வெளியீடுத்...

ஆண்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான 6 இலட்சத் துக்கும் மேற்பட்ட இலவசப் பாட நூல்கள் 15 லொறிகளில் நாளை ஏ-9 வீதியூடாக அனுப்பி வைக்கப்படுகின்றது.

இப் பாட நூல்கள் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் விரி.செல்வரட் ணத்திடம் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார கையளிப்பார்.

பின்னர் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்; 5 கல்வி அலுவலகங்கள் ஊடாக பாட நூல்களைப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைப்பார் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா குறிப்பிட்டார். (ச-5)

## அரசியல்...

பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே சிறில் எம். பி. இவ் வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் கூறியதாவது,

அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி குறைநிரப்புப் பிரேரணையில் நாம் கனத்த இதயத்துடன் ஏமாற்றம் நிறைந்த சூழ்நிலையிலேயே பேசுகின்றோம்.

இந்த அமைச்சு மக்களினால் தினம் பேசப்படுகின்ற அமைச்சு. அதேவேளை உலகத்தினால் பார்க்கப்படுகின்ற அமைச்சு. அது நன்மையாக இருக்கலாம். தீமையாக இருக்கலாம். ஆனால் நாங்கள் உண்மையைப் பேச விரும்புகின்றோம்,

கடந்த மூன்று தசாப்த காலமாகத் தொடர்ந்து வந்த மோதல்கள் முடிபுக்கு வந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளபோதிலும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வு காண்பது மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றுவது போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதை இன்றைய இச் சபை விவாதத்தில் அரசையும் அமைச்சையும் அதிவிநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்றார். (ச-5)

## வரவு...

நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம் முறையும் வரவு- செலவுத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பிப்பார் என்றும் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படும் 5-வது வரவு-செலவுத் திட்டம் இது என்பது குறிப்பிடத் தக்கது. (ச-5)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவரும் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் முன்னாள் உப தலைவருமான

கப்டன் D.A.M.குணசிங்கம்

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.உதைபந்தாட்ட லீக்,
யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.



கப்டன்
D.A.M.குணசிங்கம்

## Piano ,Violin Notes

A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான Organ,Guitar புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான பயிற்சி வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. 300 சினிமாப்பாடல்களுக்கான Notes உம் வீட்டில் இருந்தவாறே Organ,Guitar பழகுவதற்கான பயிற்சி புத்தகங்களும் விற்பனைக் குண்டு.

கரவீணா இசைமன்றம்
75, கோவில் வீதி, யாழ்ப்பாணம். T.P. :-0777031293 (3536)

**34000/-**
- Intel Pentium 2.8 Ghz
- Asrock G31 Mother Board
- Kingston 512 MB DDR II RAM
- 160 GB SATA Hard Disk
- ATX Casing • 15" LG Monitor
- Asus CD ROM
- Keyboard • Optical Mouse
- Multimedia Speaker

FREE - Kingston 4 GB Pendrive

**35500/-**
- Intel Pentium 2.8 Ghz
- Asrock G31 Mother Board
- Kingston 1 GB (800) RAM
- 320 GB SATA Hard Disk
- ATX Casing • 15" LG Monitor
- Samsung DVD ROM
- Keyboard • Optical Mouse
- Multimedia Speaker

FREE - Kingston 4 GB Pendrive

**42000/-**
- Intel Pentium 2.5 Ghz Duo Core
- Foxconn Mother Board
- Kingston 1 GB (800) RAM
- 320 GB SATA Hard Disk
- ATX Casing
- 15.6" LCD Monitor
- DVD Writer
- Keyboard • Optical Mouse
- Multimedia Speaker

FREE - Kingston 4 GB Pendrive

**48500/-**
- Intel Pentium 2.6 Ghz Duo Core
- Foxconn / Asrock Mother Board
- Kingston 1 GB (800) RAM
- 320 GB SATA Hard Disk
- ATX Casing • 17" (16.9) LCD Monitor
- DVD Writer
- Keyboard • Optical Mouse
- Multimedia Speaker • UPS 650 W

FREE - Kingston 4 GB Pendrive

**58500/-**
- Intel Core 2 Duo 2.8 Ghz
- Intel Original DG 31 PR Motherboard
- Kingston 2 GB (800) RAM
- 320 GB SATA Hard Disk
- ATX Casing
- 17" (16.9) DELL LCD Monitor
- DVD Writer • Keyboard
- Optical Mouse • UPS 650 W
- Multimedia Speaker

FREE - Kingston 4 GB Pendrive

**59500/-**
- Intel Core 2 Duo 2.53 Ghz
- Asus P5KPL-Am Motherboard
- Kingston 2 GB (800) RAM
- 320 GB SATA Hard Disk
- ATX Casing • 19" LCD Monitor
- DVD Writer • Keyboard
- Optical Mouse
- Multimedia Speaker
- UPS 650 W

FREE - Kingston 4 GB Pendrive

**NETWORK**

| | |
|---|---|
| Network Card | - 750/- |
| D-Link Broad Band Router (4 Port) | - 4800/- |
| D-Link Broad Band Router (4 Port) Wireless | - 5800/- |
| D-Link ADSL2 + DSL 2540U Router (4 Port) | - 5900/- |
| D-Link ADSL2 + DSL 2540U Router (4 Port) Wireless | - 8300/- |
| D-Link Wireless USB Adapter | - 3750/- |
| D-Link Network Switch (16 Port) | - 4500/- |
| ADSL Splitter | - 200/- |

COMPUTER TABLE 2700/-

PRASHERA 0777 49 00 76

HSDPA Prolink Modem (Sim) Broadband 3.5 G USB 9500/-

- Intel Pentium 2.0 Duo Core
- 160 GB SATA Hard Disk
- 1 GB DDR II RAM
- DVD Writer

ACER LAPTOP
- Webcam
- Bluetooth
- Modem 56 K
- WiFi
- Bag

72900/-
One Year International Warranty

WEB CAMERA 990/-

SONY PENDRIVE MP3 PLAYER 2 GB 3900/-

* Warranty Value 1-3 years
* Stock Available

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/ஃபக்ஸ்: 021 222 6554
Email: musicworld@dialognet.lk (ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்) (C-3355)

## நியூ சிற்றி ரேடேர்ஸ் இடமாற்றம்

சொனி, பனசொனி, சொனிக்கா ரேடியோ ,கசற் ரெக்கோடர் சொனி,பைனியர்,ஆரெக் கார் ரேடியோ,சொனி,பனசொனிக், LG கலர் டிவி ,டிஸ்TV கிரோகோல்ட் ரிசீவர், சொனி, பனசொனிக், அட்லாண்டா DVD பிளேயர் மற்றும் சகல விதமான இலத்திரனியல் உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருள்களை திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

நியூ சிற்றி ரேடர்ஸ்,
319 A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:- 021 222 3226 (C3354)

(மேற்படி ஸ்தாபனத்துக்கு யாழ்.நகரில் வேறு கிளைகள் இல்லை.இந்த ஸ்தாபனம் K.K.S. வீதியில் ஸ்ரான்லி வீதி சந்தியில் இருந்து உட்புறமாக 6 ஆவது கடை)


## மரண அறிவித்தல்

### சிவசம்பு செந்தில்நாதன்

(வங்கி முகாமையாளர்)

[Bank of Ceylon,Jaffna]



அளவெட்டி மத்தியை பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப் பிடமாகவும் கொண்ட சிவசம்பு-செந்தில்நாதன் 20.9.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் சிவசம்பு (இளைப்பாறிய ஆசிரியர்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி) செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற Dr.RMP இராசரெத்தினம்-இரத்தினபூபதி தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவமலரின் அன்புக்கணவரும், அபிராமி (ஆசிரியை-யாழ். இந்து ஆரம்பபாடசாலை), மயூரன் (லண்டன்), நிவேதிதா (மாணவி -யாழ்.இந்து மகளிர் கல்லூரி-2010, வர்த்தகப்பிரிவு) ஆகியோரின் அன்புத்தந்தையும், லிங்கராஜ் (ஆசிரியர்-திருக் குடும்ப கன்னியர் மடம்) இன் அன்பு மாமனாரும்,யருஷனின் அன்புப் பேரனும், சிவநாதன் (சாவகச்சேரி), லோகநாதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சிவதாசன் (கொழும்பு), சிவரஞ்சினி (கனடா), புவிராஜ் (கொழும்பு), தியாகேஸ்வரி (சாவகச்சேரி), லோகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2009) புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 11 மணியளவில் வண்ணை கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், இலங்கை வங்கி ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.566, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(யா/இந்து ஆரம்ப பாடசாலை அருகாமையில்)

தகவல்
மனைவி,பிள்ளைகள்
மருமகன்
T.P. No. 021-2225205

(3554)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.